ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி க. ரக்தாக்ஷி௵ வைகாசிமீ பகுதி ரு.

Vol. 1. May & June. No. 5.

இராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

(86-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி உடையவர், தேசிகன், மணவாளமாமுனிகள் இவர்களுடைய அவதார விஷயம் நிரூபிக்கப்படுகிறது.

உடையவர் விஷயமான நூற்றந்தாதியில் "அடையார் கமலத்தலர்மகள் கேள்வன்" என்கிற பாசுரத்தில் உடையவரைப் பஞ்சாயுதங்களுடைய அவதாரமாகச் சொல்லியிருக்கிறது. அப்படியே வேதாந்தாசார்யரும் "வவ்ருதேபஞ்சபிராயுதைர்முராரே:" என்றும், "விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் வேத்ரஸாரஸ் த்ருதண்டம்" என்றும் யதிராஜசப்ததியில் அருளிச்செய்திருக்கிறார். திருவனந்தாழ்வான் அவதாரமாகப் பிரஸ்தாபிக்கவில்லை; ஆனால் குருபரம்பரா ப்ரபாவத்திலும், திவ்யஸூரி சரிதத்திலும் திருவனந்தாழ்வானவதாரமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தொண்டனூரில் ஜைனர்களுடன் வாதம் செய்யும்போது திரைக்குள் திருவனந்தாழ்வானாக இருந்ததாகவும், "கலௌ கச்சித் பவிஷ்யதி" என்று யாதவகிரிமாஹாத்மயத்தில் இருக்கிற சுலோகத்தில் "கச்சித் பவிஷ்யதி" என்று சொல்லியது தம்மையென்று உடையவர் அருளிச் செய்ததாகவும் குருபரம்பரா ப்ரபாவத்திலிருக்கிறது.

அதற்கு அடையாளமாக இப்போது தொண்டனூரில் திருமுடியில் ஏழுபடங்களுடன் அர்ச்சாரூபமாக ஸேவை சாதித்துக் கொண்டிருக்கிறார். வரவரமுனிசதகத்தில், திருவனந்தாழ்வான் முந்தி உடையவராக அவதரித்து, பிந்தி மணவாளமாமுனிகளாயவதரித்ததாக எறும்பியப்பா அருளிச்செய்திருக்கிறார். அப்ப

டியே மணவாளமாமுனிகளுடைய பிரபந்தத்தில், "ஆதியிலே அரவரசையழைத்து" என்கிற பாட்டில் உடையவரைத் திருவனந்தாழ்வானவதாரமாகச் சொல்லியிருக்கிறது. இப்படியிருக்கிற பிரமாணங்களைக்கொண்டு உடையவர் திருவனந்தாழ்வானுடைய பூர்ணவதாரமாகவும், பஞ்சாயுதங்களுடைய சக்தியாவேசமாகவும் கொள்ளவேணும்.

அப்படியே வேதாந்தாசார்யரை (௧௦) "வேங்கடேசாவதாரோயம் தத்கண்டாம்சோ தவாபவேத்" என்கிற சுலோகத்திலும் (௧௧) "வித்ராவிநீ விபுதவைரி வரூதிநீநாம் பத்மாஸஹாய பரிசாரவிதௌ ப்ரயுக்தா உத்ப்ரேக்ஷ்யதே புதஜநை: உபபத்திபூம்நா கண்டாஹரே: ஸமஜநிஷ்ட யதாத்மநேதி" என்று வேதாந்தாசார்யர் அருளிச் செய்திருக்கிற ஸங்கல்ப ஸூர்யோதயத்திலும், வேதாந்தாசார்ய விஷயமான ஆசார்ய சம்பு முதலான கிரந்தங்களிலும் சொல்லியிருக்கிறது.

திக்விஜயம் எம்பார்ஸ்வாமி யருளிச்செய்த சரமசுலோகடிப்பணியில் "அஸ்மத்குரு மநோஜுஷ்ட கண்டாசேஷாவதாரயோ: ஆஸ்யோத்தௌ நாதநிச்வாஸௌ நிக்நதாம்ஸ்து விகாதகாந்" என்று கண்டாவதாரமாகச் சொல்லியிருப்பதால் வேதாந்தாசார்யரைக் கண்டாவதாரமாகக் கொள்ளவேணும்.

அப்படியே மணவாளமாமுனிகள், திருவனந்தாழ்வானாக உத்தம நம்பி முதலானவர்களுக்கு ஸேவை சாதித்திருப்பதாலும், "ரகுபதே ராச்ருதோ பத்ரபீடம்" என்று எறும்பியப்பா தமக்கு ஸேவை சாதித்த பிரகாரத்தை வரவரமுனிசதகத்தில் அருளிச்செய்திருப்பதனாலும், மற்றுமுள்ள ஐதிஹ்ய விசேஷங்களாலும் திருவனந்தாழ்வானவதாரமென்று கொள்ளத்தட்டில்லை.

(௧௨) "சேஷச்ரீமாந் நிகமமகுட யுக்ம ஸம்ரக்ஷணார்த்தம்
விந்தந் ராமாவரஜமுநிதாம் ரம்யஜாமாத்ர தாஞ்ச"

(௧௦) இ-ள். திருவேங்கடமுடையானுடைய அவதாரமோ? அன்றி அவனுடைய கண்டாமணியின் அவதாரமோ? என்பதாம்.

(௧௧) தேவதைகளுக்கு விரோதிகளான அசுரர்களுடைய சைங்யங்களுக்குப் பயத்தை உண்டுபண்ணுகிறதாயும் ஸ்ரீய: பதியினுடைய கைங்கர்யவிதியிலே நியமிக்கப்பட்டிருக்கிறதாயுமுள்ள கண்டாமணியானது, வித்வான்களுக்குச் சத்ருக்களா யிருக்கிறவர்களுடைய கூட்டத்துக்கு பயத்தை உண்டுபண்ணுகிறவராயும், ஸ்ரீய: பதியினுடைய கைங்கர்யத்திலே அதிகிருதராயுமிருக்கிற தேசிகனாக அவதரித்ததென்று வித்வான்களாலே உபபத்திகளைக் கொண்டு உத்ப்ரேக்ஷிக்கப்படுகிறது.

என்று நியாய பாஸ்கரத்தில் அனந்தாழ்வா னருளிச்செய்திருப் பதையுங் கண்டுகொள்க.

இனி ஆழ்வார்கள் தாழ்ந்த வர்ணங்களிலுமவதரித்தவர்களா கையால் அவர்கள் அருளிச்செய்த பிரபந்தங்களுக்கு ஏற்படும் அப் ராமாண்ய சங்கை பரிஹரிக்கப்படுகிறது.

முதலில் ஜாதியினுடைய ஸ்வரூபம் நிரூபிக்கப்படுகிறது. ஸித்தாந்தத்தில் ஜாதி, * அவயவ ஸம்ஸ்தான விசேஷமென்று நிரூபித்து, நிரவயவ த்ரவியங்களில் அவயவ ஸம்ஸ்தானரூப ஜாதி கூடாமையால் பகவத்ஸங்கல்பவிசேஷமென்று முடிவில் நிர் ணயிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே ப்ராஹ்மண்ய முதலான ஜாதிகளும் ஸங்கல்ப ரூபமென்றே கொள்ளவேணும். இந்த விஷ யம் "ததுபர்யபிபாதராயணஸம்பவாத்" என்கிற ஸூத்ர வ்யாக்யானுவஸரத்தில் சுருத ப்ரகாசிகையில் நிரூபிக்கப்படுகிறது.

மேலும் நியாய ஸித்தாந்த வியாக்யானத்தில் ரங்கராமாநுஜ ஜீயர், பிராமணனுக்கு பிராமண ஸ்திரீயினிடத்தில் உண்டாகையே ப்ராஹ்மண்யமென்று சொல்லும் பக்ஷத்தில் விசுவாமித்திரர் முத லானவர்களிடத்தில் அது கூடாமையால் சக்தி விசேஷமாகக் கொள்ளவேணுமென்று நிரூபித்திருக்கிறார். கீதா பாஷ்ய தாத் பரிய சந்திரிகையில் "ப்ராஹ்மம் கர்ம ஸ்வபாவஜம்" என்கிற சுலோக வியாக்யான அவஸரத்தில், ஸத்வகுண மிகுதியான ப்ரகிருத் யம்சங்களுடைய ஸங்காதம் பிராஹ்மண்யமென்றும் இப்படியே ரஜோகுண மிகுதியான பிரகிருத்யம்சஸங்காதம் க்ஷத்திரியத்வ மென்றும், இப்படியே வைச்யத்துவ சூத்ரத்வாதிகளையும் ரஜோ குணம் குறைவாயும் தமோகுணம்அதிகமாயுமுள்ள பிரகிருத் யம்சஸங்காதமென்றும், தமோகுணமாத்ர பிரகிருத்யம்ச ஸங்காத மென்றும் நிரூபித்திருப்பது ஸர்வ சாதாரணமாகக் கொள்ள லாகாது. ஏனெனில்? விசுவாமித்ர வீதஹவ்ய ராஜாதிகளிடத்தில் அது கூடாமையால் ஸம்பவாபிப்பிராயமாம். ஆகலால் ஸங்கல்ப

(கஉ) இ-ள். திருவனந்தாழ்வான் உபய வேதாந்தங்களினுடைய ரக்ஷணத்தின் பொருட்டு முந்தி உடையவராயும், பிந்தி மணவாளமா முனிகளாயும் அவதரித்தார் என்பதாம.

* அவயவ ஸம்ஸ்தானம்—அவயவ அமைதி

|| ஸங்காதம்—கூட்டம்.

விசேஷமே ஜாதியாகையால் அந்த ஜாதியும் தபசு, பிராஹ்மணவாக்யம், சாபம், இவைகளால் மாறுவதுபோல் ஆழ்வார்களிடத்திலும், பகவத் கடாக்ஷ விசேஷத்தாலே மாறத் தட்டில்லை.

ஆனால், விசுவாமித்ரப்ராஹ்மண்யத்துக்குக் காரணம் *சருவித்யாஸமேயன்றி தபசு காரணமாகாதென்பது சேராதென்று நிரூபிக்கப்படுகிறது. சருவித்யாஸமே விசுவாமித்ரப்ராஹ்மண்யத்துக்குக் காரணமென்னில்? இந்தச் சருவித்யாஸம் பரசுராமனிடத்திலும் இருப்பதால் பரசுராமனுக்கு க்ஷத்ரியத்வம் ஏற்படத் தட்டில்லை. ஆனால், அப்படி க்ஷத்திரியத்வங் கொள்ளில் “ப்ராஹ்மணோவீதி” என்ற ஸ்ரீ ராமாயணத்தோடு விரோதிக்கும். மேலும் பாரதத்தைக் காட்டிலும் ஸ்ரீ ராமாயணம் பிரபல ப்ரமாணமாகையால் அந்த ஸ்ரீ ராமாயணத்தில் “ப்ராஹ்மண்யம் தபஸாப்ராப்தம்” என்கிறதோடு விரோதிக்கும். ஆனால் சருவித்யாஸஞ் சொல்லியிருப்பதற்குப் பிரயோஜனம் யாதெனில்? விசுவாமித்ரப்ராஹ்மண்யம் வருகைக்குக் காரணமான தவம் புரிதற்கு ஹேதுவென்று கொள்ளவேண்டும். பாகவதம் நவமஸ்கந்தத்தில் விசுவாமித்ரருக்கு தபசாலே 'பிராஹ்மண்யம் ஏற்பட்டதென்று சொல்லுகிற இடத்தில் சருவித்யாஸம் பிராஹ்மண்யத்துக்கு ஹேதுவான தபசுக்குக் காரணமென்று வீரராகவீயத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் (கஉ) “ஸ்வவசனேன க்ஷத்திரியம் விசுவாமித்ரம், ப்ராஹ்மணீ க்ருதவதோ வஸிஷ்டஸ்ய” என்று பட்டர் அருளிச்செய்திருக்கிறார். முராரி கவி, “அநர்க்கராகவம்” என்கிற நாடகத்தில் திரிஜன்மாவென்று சொல்லியிருக்கிறார். அஃதாவது (கங) ‘ஔத்பத்திகேன பிராஹ்மணேன பிராஹ்மண்யேன த்ரிஜாதகாந் முனே:’ என்று சொல்லியிருக்கிறது. போஜராஜாவும் போஜசம்புவில் (கச) “சங்க்ராந்த வர்

---

*சரு-ஹோமத்துக்குரித்தான அன்னம்.

(கஉ) இ-ள். தன்னுடைய வார்த்தையாலே க்ஷத்திரியரான விசுவாமித்திரனை பிராமணனாக்கின வசிஷ்டருடைய என்பதாம்.

(கங) இ-ள். பிறவியினாலும், உபநயனத்தாலும், பிராமண்யத்தாலும் மூன்று பிறப்பை யுடைத்தாயிருக்கிற விசுவாமித்திரரிடத்தினின்றும் என்பதாம்.

(கச) இ-ள். முந்தி க்ஷத்திரியனாயிருந்து பிந்தி பிராமண்யத்தை யடைந்த விசுவாமித்திரருடைய ஸஹவாஸத்தால் உண்டாயிருக்கிற புண்யத்தைப்போல என்பதாம்.

135

ணாந்தர காதிஸம்ஸர்கோ: ஸம்பர்க்க புண்யா திவராமபத்ர:" என்று சொல்லியிருக்கிறார். ஆகையால் சருவித்யாஸத்தை விசுவாமித்ரருடைய பிராஹ்மண்யத்துக்கு ஹேதுவாகக் கொள்ளில் அது ஜன்ம முதல் அநுவர்த்திக்கவேண்டியதாகையால் வர்ணாந்தரமென்றும் திரிஜன்மாவென்றும் சொன்னது பொருந்தாது. அப்படியே விசுவாமித்ர விஷயத்தில் சருவித்யாஸத்தைக் காரணமாகச் சொன்னாலும் ருஷிவாக்யத்தாலே பிராஹ்மண்யத்தை யடைந்த வீதஹவ்ய விஷயத்தில் வேறு காரணம் சொல்ல முடியாது. அப்படியே இந்த விஷயத்தை (கரு) "கிமப்யத்ராபி ஜாயதே, யோகிநஸ் ஸர்வயோநிஷு, ப்ரத்யக்ஷிதாத்ம நாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்" என்று பாரத்வாஜ ஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது. பாகவதத்திலும் (கசு) "தக்த துர்ஜாதி கில்பிஷ:" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தாழ்ந்தஜாதி போனால் உயர்ந்தஜாதி வரும் பக்ஷத்தில் அதுக்குண்டான தர்மங்களும் வர ப்ரஸங்கிக்குமே எனில்? அதற்குப் பரிகாரம் சொல்லப்படுகிறது. எப்படி ராம கிருஷ்ணாத் யவதாரங்களில் அந்த விக்ரஹம் அப்ராகிருதமாகையால் ஒரு ஜாதியுமில்லையோ அதுபோல (கஎ) "ப்ராதுர்பாவஸ் ஸுரநர ஸமோதேவதேவ: ததீயா ஜாத்யா வ்ருத்தோபிச குணத: தாத்ருசோ நாத்ர கர்ஹா" என்கிற சுலோகத்தின்படி தாழ்ந்த ஜாதிபோனது மாத்ரமேயல்லது அவர்களிடத்தில் மற்றொரு ஜாதி வருவதில்லை. *ஸாஜாத்யத்தைக்கொண்டு அந்தந்த ஜாதிகளுக்கு ஏற்பட்ட தர்மாநுஷ்டானமும் மற்ற ஜாதிகளுக்கேற்பட்ட அநுஷ்டானமும் ஏற்பட்டிருக்கும்; ஸ்வவர்ண மர்யாதையைக் கடக்கவும் கூடாது. ஆகையால் ஆழ்வார்கள் ராமகிருஷ்ணாத்யவதாரங்கள்போல ஸர்வ வர்ணாதீதர்களாகையால் தேகத்தைப் பற்றிவரும் ஜன்மத்துக்குப் பொருத்தமான உயர்வு தாழ்வு வருவதற்கு இடமில்லை.

(கரு) இ-ள். யோகிகள் எந்த ஜாதியிலும் பிறக்கிறார்கள். அவர்கள் பரமாத்மாவை சாக்ஷாத்கரித்தவர்களாகையால் அவர்களின் ஜாதி நிரூபிக்கத் தக்கதன்று.

(கசு) இ-ள். பகவத்பக்தி மாஹாத்ம்யத்தால் துர்ஜாதிரூப தோஷமில்லாதவன்.

(கஎ) இ-ள். ஸர்வேசுவரன், தேவமனுஷ்யாதி ஜாதிகளில் அவதரிப்பதுபோல அப்படியே அவனுடைய பக்தர்களும், அவதரிக்கிறார்கள். ஜாதி வ்ருத்தகுணங்களால் இதில் நிந்திக்கத்தக்க தொன்றுமில்லை என்பதாம்.]

*ஸாஜாத்யம்-ஓரினமாதல்.

இனி இதற்கு அனுகுணங்களான அனுஷ்டானங்கள் காண்பிக்கப்படுகின்றன. பாரதத்தில் தர்மபுத்ர ராஜஸூய யாகத்தில் பட்டத்துக்குரிய க்ஷத்திரியர்கள், ருஷிகள், இவர்களுடைய ஸபையில் கிருஷ்ணனுக்கு அக்ரபூஜை செய்ததாகச் சொல்லப்படுகிறது. பெரும்புலியூரில் திருமழிசைப்பிரான் வருகிறபோது அவரை, சூத்ரஜாதியாக நினைத்து வேதாத்யயநத்தை நிறுத்தியவர்கள் பின்பு அவர்களே அப்படிப்பட்ட திருமழிசைப்பிரானுக்கு யஜ்ஞத்தில் அக்ரபூஜை செய்திருக்கிறார்கள். கிருஷ்ணன் தூதுசொல்லுகைக்காக அஸ்தினாபுரத்துக் கெழுந்தருளும்போது சூத்ர ஜாதியான விதுரருடைய வீட்டில் அமுதுசெய்ததாகச் சொல்லியிருக்கிறது. சூத்ரஜாதிக்கு சமையற்றொழில் அதிகாரம் இருந்தபோதிலும் சூத்திர வீட்டில் சூத்திர சொத்தான ஆஹாரத்தை அமுது செய்யக் கூடுமா? அப்படி சாஸ்திர ஸித்தமாக இருக்கும் பக்ஷத்தில் துர்யோதனன் (கஅ) "பீஷ்ம த்ரோணா வதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந, கிமர்த்தம் புண்டரீகாக்ஷ புக்தம் வ்ருஷல போஜநம்" என்று கேட்கப் பிரஸக்தியில்லை. ஆனால் (கக) ப்ராப்யஜ்ஞானம் ப்ராஹ்மணாத் க்ஷத்திரியாத்வா" என்கிற சுலோகத்தின்படி ஆபத்காலத்தில் தாழ்ந்த வர்ணஸ்தர்கள் உயர்ந்த வர்ணஸ்தர்களுக்கு உபதேசிக்கலாமென்னில்? அப்படியே உபதேசிக்கும் பக்ஷத்தில் அவர்களிடத்தில் *அநுவ்ரஜ்யை *சுச்ரூஷை கூடாதென்று சாஸ்த்ரம் சொல்லியிருக்க மதுரகவிகள் ஆழ்வார்விஷயத்தில் அநுவிருஜ்யை முதலானவை செய்யக்கூடாது. மேலும் திருப்பாணாழ்வாரை லோகசாரங்க மஹாமுநிகள் எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய்ப் பெரிய பெருமாள் ஸந்நிதியில் சேர்த்திருக்கிறார்; ஆதலால் திருப்பாணாழ்வார் முனிவாகனர் ,என்று சொல்லப்படுகிறார். ஆழ்வார்கள் அர்ச்சையில் பூஜ்யர்களென்றும், விபவத்தில் பூஜ்யர்கள் அன்றென்றும் சொல்லுவதும் மதுரகவிகள் விபவத்தில் ஆழ்வாரை அநுவர்த்தித்தார் என்பதோடும் விரோதிக்கும். மேலும் விபவத்தில் அர்ச்சிக்க நேரிடாமல் போனதற்காக பிரதிநிதியாக அர்ச்சையில் விபவஸஜாதீயமான விக்ரஹத்தை ஏற்படுத்திக்கொண்டு பூஜிப்பது லோகஸித்தம். இந்த விஷயம் ஏகலவ்யனிடத்திற் காணலாம்.

(கஅ) இ-ள். பீஷ்ம துரோணாதிகளையும் என்னையும் விட்டு சூத்ரான்னத்தை புஜித்த காரணமென்ன? என்பதாம்.

(கக) இ-ள். பிராமணனிடத்திலாவது க்ஷத்திரியனிடத்திலாவது ஞானத்தைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்பதாம்.

இப்படியே திருக்கச்சிநம்பி விஷயத்திலும் 'ராமாநுஜமுநேர் மாந்யம் வந்தேஹம் ஸஜ்ஜநாச்ரயம்' என்று தனியன் அநுஸந்தித்து வருகிறார்கள். ஆனால் விதுர ப்ரஜாகரத்தில் விதுரர் "சூத்ரயோநாவஹம் ஜாத: நாதோந்யத்வக்து முத்ஸஹே" என்று த்ருதராஷ்ட்ரன் தன்னை சூத்ரனாக நினைத்திருப்பதனாலும், தாம் ஜ்ஞாநாதிக்யத்தைக்கொண்டு சூத்ரஜாதிக்குத் தகாத பிரம்மவித்யோபதேசத்தைச் செய்யும் பக்ஷத்தில் ஸாமாந்ய சூத்ரர்களும் அப்படிச் செய்வார்களாகையால் *லோக ஸங்க்ரஹம் ஏற்படாதென்பதை உத்தேசித்துச் சொன்னதாகக் கொள்ளவேணும். அப்படிக் கொள்ளாதவரையில் கீழ் விதுரர் வீட்டில் கிருஷ்ணன் அமுது செய்ததோடும் விதுரரை தர்மபுத்ரர் பிருஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்தா ரென்பதோடும் விரோதிக்கும். ப்ருஹ்மமேதஸம்ஸ்கார விஷயத்தில்பாரதத்தில் 'யதிதர்மமவாப்தோஸௌ, போபோ ராஜந் நதக்தவ்யம், ஏதத் விதுர ஸமஜ்ஞிதம்' என்கிற அசரீரி வாக்யத்தை ப்ரமாணமாகக் கண்டுகொள்வது. *தூஷ்ணீம்ஸம்ஸ்காரமென்னில் கீழ்ச்சொன்ன வாக்யத்தோடு விரோதிக்கும்.

ஆனால் த்ரௌபதி விவாஹம்போல் சில வியக்திகளிடத்திலிருக்கிற அநுஷ்டானம் நமக்கு க்ராஹ்யமன்றென்று சொல்லும் பக்ஷத்தில் அங்கு இப்படிப்பட்ட விவாஹம் கூடாதென்று துருபத மஹாராஜா ஆக்ஷேபிக்க, வியாஸர் ஸமாதானஞ் சொன்னதுபோல் இங்கு அப்படி ஆக்ஷேபஸமாதானங்கள் ஏற்படவில்லை. ஜ்ஞாநாதிக்ய விஷயத்தில் இப்படியே செய்யவேண்டுமென்று அசரீரி வாக்யத்தால் தெரியவருகிறது. இப்படியே சக்ரவர்த்தித் திருமகன் ஜடாயுஸ்ஸுக்கு ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் பண்ணிய விஷயத்தையும் கண்டுகொள்வது. இப்படி சாஸ்திரார்த்த மிருந்தபோதிலும் அந்தப்படியே அனுஷ்டிக்கும் பக்ஷத்தில் லோகக்ஷோபம் பிறக்குமென்றும் அப்படிச்செய்வது வ்யக்தி விசேஷ நியதமென்றும் தேசிகன் அருளிச்செய்திருக்கிறார். இப்படியிருந்தபோதிலும், ஸாக்ஷாத்க்ருத பகவத் தத்வரான திருமங்கையாழ்வார் "அந்தணர்மாட்டந்தி வைத்த மந்திரத்தை" என்றருளிச்செய்த பாசுரத்தின் வியாக்யா

---

*அநுவ்ரஜ்யை-பின்னிற்றல். சுச்ரூஷை-பணிவிடை.

*லோகஸங்க்ரஹம்-லோகாநுக்ரஹம்.

*தூஷ்ணீம்ஸம்ஸ்காரம்-மந்திரமின்றி தந்திரிகமாகச் செய்யும் கிரியைகாரம்.

னத்தில் பெரியவாச்சான்பிள்ளை, "திருவுள்ளத்தில் வேதார்த்தங்கள் விசதமாக இருக்கச்செய்தேயும் தமக்கு அநதிகாரந்தோற்ற அந்தணர் மாட்டெண்கிறார் காணும்" என்று அருளிச் செய்திருக்கிறார்.

மதுரகவிகள் முதலானவர்கள் ஆழ்வாருடைய அதிமாநுஷ்ய வியாபாரத்தைக் கண்டு மிகவும் அனுவர்த்திக்க விசேஷார்த்தங்களை அருளிச்செய்தாரே ஒழிய ஸர்வ ஸாதாரணமாக அருளிச்செய்யவில்லை. திருக்கச்சி நம்பி நேரில் பேரருளாளப் பெருமாளுடன் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்ததும் "அஹமேவ பரம் தத்வம்" என்று ஆறுவார்த்தை அருளிச் செய்ததும் லோக ப்ரஸித்தம்.

அப்படியிருக்க அவர் லோக மர்யாதையை அதிக்கிரமிக்கவில்லை. எப்படிப்பட்ட ஜ்ஞானவான்களா யிருந்தபோதிலும் அவரவர்களுடைய வர்ண தர்மங்களை லோக ஸங்க்ரஹத்தின் பொருட்டு அனுஷ்டித்துக்கொண்டே வந்திருக்கிறார்கள். இந்த விஷயத்தை "யத்யஹம் ஜாதுவர்த்தேயம் ஜாதுகர்மண்ய தந்த்ரித: ஸங்க்ரஹஸ்ய சகர்த்தாஸ்யாம், உபஹந்யாமிமா: ப்ரஜா:" என்று கீதாசார்யன் அருளிச் செய்தான். பாரத்வாஜ ஸம்ஹிதையில் ஆசார்யன் நல்ல குலத்தில் அவதரித்தவனா யிருக்கவேணும்; ஜ்ஞாநாநுஷ்டாநங்களோடே கூடினவனாயிருக்கவேணும்; ப்ராஹ்மணர்களைத் தவிர மற்றவர்கள் ஆசார்யர்களாகக் கூடாதென்று சொல்லிவிட்டு "ப்ரத்யக்ஷிதாத்ம நாதாநாம், நைஷாம் சிந்த்யம் குலாதிகம்" என்று சொல்லியிருப்பதால் ப்ரயக்ஷிதாத்ம நாதர்களான ஆழ்வார்கள் ஆசார்யர்களாக இருப்பது பொருத்தமானதேயாம்.

இப்படிப் ப்ரமாணநிரூபண முந்திச் செய்யவேண்டிய விஷயமும், ப்ரமாணங்களுடைய சங்க்யைகளும், பிரமாணங்களுடைய பிராபல்ய தௌர்பல்யங்களும் ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகளுக்கு ப்ராமாண்ய நிர்வாஹத்தின் பொருட்டு பாஷா விஷய ப்ரஸ்தாபமும், ஆழ்வார்களுடைய அவதார விஷய விசாரமும் அதுவடியாக ஜாதி விஷய ப்ரஸ்தாபமும் யதாமதி நிரூபிக்கப்பட்டன.

139

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் அநாதி.

யோகார்ஷீதபி மாமேவம் தயயாதுர் நிவாரயா
ந்ருஸிம்ஹார்ய குருச்ரீமாந் ஜீயாதாசந்த்ர தாரகம்
வரதம்த்வி ரதார்த்திக்நம் ஸ்ரீநிவாஸம் தயாநிதிம்
உபாவபி மமார்த்திக்நௌ சிந்தயேத் ஹ்ருதி ஸந்ததம்.

ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தமானது ராமாநுஜ மதமென்று வழங்கப்படுகிறபடியால் ராமாநுஜாசார்யருக்குப் பின் இம்மதம் அவரால் உண்டுபண்ணப்பட்டது. இது அநாதியன்று, என்று சிலர்களுக்குண்டாகும் அபிப்பிராயத்தை மாற்றி உண்மையை விளக்கிக் காட்டக்கருதி ஏதோ தெரிந்த விஷயத்தை எழுதத் துணிவுகொண்டேன்.

ஸ்ரீ வைஷ்ணவமதமானது அநாதியாகமாட்டாது என்கிறவர் கட்கும் அம்மதமே அடியோடு கிடையாது என்று சொல்வது ஸாத்யமாகமாட்டாது. ஏனெனில்? ஸ்ரீ வைஷ்ணவ மதமென்றால் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஏற்பட்ட கொள்கையென்று பொருள். ஸ்ரீ வைஷ்ணவர்களாகிறார் விஷ்ணுசம்பந்த முடையவர்கள். விஷ்ணுவே மேலான தெய்வமென்று ஒப்புக்கொள்ளாதவர்களுங் கூட விஷ்ணுவை ஒப்புக்கொள்ளாதிரார். பிருஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்று மூவரையும் சேர்த்துச் சொல்வதில் ஒரு விவாதமுமில்லை. ஆகையால் விஷ்ணுவை ஒப்புக்கொள்ளும்போது விஷ்ணுவினுடைய பரிகரங்களென்று காட்டக்கூடிய வைஷ்ணவ சின்னங்களைத் தரிக்கும் பரிகரங்களை ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது.

அப்படியுள்ள பரிகரங்கட்கு ஒருவிதமான கொள்கை இல்லாமலிருக்குமா? அப்படிப்பட்ட கொள்கைதானே ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தமென வழங்கப்படுகிறது. விஷ்ணு ஒருவர் உண்டென்று ஒப்புக்கொள்ளும்போது அவர் ஏற்பட்டது முதல் அந்த ஸித்தாமும் உண்டெனக் கொள்ளவேண்டிய தவசியமாகையாலே இது அநாதியெனக் கொள்ளத் தட்டில்லை.

இனி இந்த ஸித்தாந்தமானது எல்லாராலும் ஒப்புக்கொள்ளக் கூடியதா? இது பிரதானர்களால் பரிக்ரஹிக்கப்பட்டதுண்டா?

இராமாநுஜ மதமென்கிற வியவஹாரமானது, இந்த மதம் இப்போதாக உண்டானதென்பதைக் காட்டவில்லையா? என்கிற விஷயங்களே விசாரிக்க வேண்டியவையாம்.

இந்த மதம் எல்லோராலும் அங்கீகரிக்கத் தகுந்ததென்பது அதன் திருநாமத்தாலே நன்கு விளங்கும் எப்படியெனில்? விஷ்ணுவுக்கு நாமங்கள் பலவுள. அவற்றுள் ப்ரதானமாயுள்ளது நாராயண நாமமாம். மற்ற நாமங்கள் விஷ்ணுவைத்தவிர ஏனைய தேவதைகளையும் குறித்துணர்த்தும்படி பொருளிசைந்து கிடக்கின்றன. நாராயண நாமத்திலுள்ள ணகாரம் அந்த நாமத்தை மற்ற தேவர்கட்குக் கொள்ளும்போது பெருவிலங்காய் நின்று ப்ரதிபந்தகமாயிருக்கும். இது யாவரு மறிந்ததே. இதற்காக "ணத்துவ சந்திரிகை" "ணத்துவதத்துவ பூஷணம்" எனப் பல நூல்களுண்டு. மேலும் புருஷ சூக்தத்தில் விஷ்ணு விஷயமான காயத்திரியைச் சொல்லுகிற இடத்தில் முதலில் நாராயண நாமத்தை எடுத்து அப்பால் வாசுதேவ நாமத்தைச் சொல்லி, இறுதியாக விஷ்ணு நாமத்தோடு முடிந்திருக்கிறது. அந்த காயத்ரியில் நாராயண நாமத்தை முதலில் எடுத்தோதப்பட்ட முறையினால் அதுவே ப்ரதானமென்று தெரிகிறது. அதுபற்றியே வாசுதேவ நாமத்தோடுகூடிய மந்திரத்தினும், விஷ்ணு நாமத்தோடுகூடிய மந்திரத்தினும், நாராயண நாமத்தோடுகூடிய அஷ்டாக்ஷர மந்திரத்துக்கே பெருமை பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டு மந்திரங்கட்கும் *அர்த்த பூர்த்தியில்லாமை, ||சிஷ்ட பரிக்ரஹமில்லாமை *அசிஷ்ட பரிக்ரஹமுடைமை ஆகிய இவை காரணமாக அம் மந்திரங்கள் இரண்டுமே இம் மந்திரத்தைப்போல் விசேஷித்துப் பெரியோர்களால் ஆதரிக்கப்படுவதில்லை. இம் மந்திரத்துக்கு அக்குறைகள் ஒன்றுமில்லை. இங்ஙனம் முக்கியமாயுள்ள நாராயண நாமத்தை முன்னிட்டு இந்த மதத்தை வழங்கும் வழக்கமில்லாமல் விஷ்ணுமதமென்றும், வைஷ்ணவமதமென்றும்

* அர்த்தபூர்த்தியில்லாமையாவது-தெரிந்கொள்ளவேண்டிய விஷயங்களைத் தெளிவாய்த் தெரிவிக்கும் தன்மையில்லாமை.

|| சிஷ்ட பரிக்ரஹமில்லாமையாவது-பெரியோர்களால் ஆதரித்து விரும்பாமை.

* அசிஷ்ட பரிக்ரஹமுடைமையாவது-வேதத்திற் சொல்லிய முறையை உள்ளபடி கொள்ளாதவர்களால் ஆதரித்துக் கைக்கொள்ளப்படுகை.

வழங்கும் வழக்கு ஏற்பட்டிருக்கிறது. இவ் வழக்கத்தை யுற்று நோக்குங்கால் இதில் ஒரு விசேஷமுண்டென்று கொள்ளக் கிடக்கிறது. அஃதாவது விஷ்ணுஸம்பந்தமுள்ள மதம், வைஷ்ணவர்களுடைய மதமென்று பொருள் ஏற்படுவதுபோல் விஷ்ணுமதம், வைஷ்ணவமதம் என்ற இரண்டு வாக்யங்களையும்*கர்மதாரயசமாஸமாக்கி அவற்றிற்கு முறையே விஷ்ணுவான மதமென்றும், வைஷ்ணவமான மதமென்றும் பொருள் விரித்துக் கூறலாம். ஆக, பரவுந்தன்மையுள்ள மதம் என்று ஏற்படுகிறது.

இம்மதம், இன்னவிடத்திற் பரவுமென்பது விஷ்ணுமதமென்ற பதச் சேர்க்கையினால் குறிப்பிடப் படாமையினால் எந்த வஸ்துக்கள் அதற்குத் தகுதியாயிருக்குமோ? அவற்றையெல்லாம் காட்டும். ஆகையால் எந்த தேசத்திலும் எந்தக் காலத்திலும் எந்த ஜாதியிலும் பரவக்கூடிய மதமென்று ஏற்படுகிறது. மேலுலகம், கீழுலகம், ஜம்பூத்வீபம், சுவேதத்வீபம் என்று ஒரு வரையறையில்லை; எங்கும் விஷ்ணுபக்தர் இருக்கக் காண்கையாலே; கிருதயுக, கலியுகமென்னும் வரையறையில்லை; எக்காலத்திலும் விஷ்ணுபக்தர் இருக்கக் காண்கையாலே; அசுரசாதியில் பிரஹ்லாதன்போல்வாரும், ராக்ஷஸ ஜாதியில் விபீஷணாழ்வான் போல்வாரும், மனுஷ்ய ஜாதியில் அம்பரீஷன் போல்வாரும், திரியக் ஜாதியில் கஜேந்திரனைப் போல்வாரும், அசையாப் பொருள்களுள் ஆல், அடம்பு போன்றவைகளும், விஷ்ணுபக்தர்களாகக் காண்கையாலே ஜாதியாலுண்டான வரையறையில்லை. ஆகையால் எந்தத்தேசத்திலும், எந்தக் காலத்திலும், எந்த ஜாதியிலும் பரவக்கூடிய மதமென்று தெளிவாகிற முறையைக்கொண்டு இவ்வாறு வழங்கினார்களெனக் கொள்ளவேண்டும். வைஷ்ணவமதம் என்னும்போது விஷ்ணுரேவ வைஷ்ணவ: என்று கொண்டால் (அஃதாவது விஷ்ணுபதத்துக்குள்ள பொருளையே வைஷ்ணவபதத்துக்கும் பொருளாகக் கொள்ளுகிற முறை) இந்தப் பொருள் விளங்கும். ஆகையால் இம்மதம் எப்போதுமுள்ளதெனக் கொள்ளுதல் குற்றமாகமாட்டாது.

இன்னமும் லோகோபகாரத்துக்குப் பத்தவதாரமெடுத்த பகவான் விஷ்ணுவென்கிற விஷயம் பக்ஷபாதமுள்ளாரும் அஃதில்லாரும் ஒப்புக்கொண்டதே. அதில் மீன் ஆமை அவதாரங்கள்

* கருமதாரயசமாசம்-பண்புத்தொகை.

ஞானோபதேசத்துக்காகையாலும், பரிமுகமா யருளியதும் ஞானத்தையாகையாலும் அவ்வுபதேச மடியாகவரும் அறிவைக் கொண்டவர்களான அகல் ஞாலத்துள்ளார் வைஷ்ணவர்களென்ப தற்கு ஐயமில்லை. ஆமையாய் நாம் தங்கியிருக்கும் பூமி ஆழ்ந்து விடாமல் தாங்கியும், மந்தர மத்தாகக்கொண்டு கடைந்து அம ரர்க்கு அமுதருளும்போது அம் மந்தர பருவதம், ஆழ்ந்துவிடா மல் தாங்கியுஞ்செய்த பேருபகாரத்தை நினைக்குங்கால் அவனு டைய ஸம்பந்தம் எவ்வுலகத்திலும் யாவர்க்கும் உளதேயாம்.

இனிக் கோலவராக மொன்றாய் நிலங்கோட்டிடைக்கொண்டு அந் நிலத்திலுள்ளாரை நிலைநிறுத்தியதும் அவனே ஆகையால் அவ னது ஸம்பந்தமில்லாதாரில்லை. பூமியிலுள்ளாரடங்கலும் பூமிக்கு மக்கள் என்பதற்கு ஐயமுண்டோ? அப்பூமகள் விஷ்ணுவுக்குப் பத்தினியாயிருக்க ஒருதாய் வயிற்றிற் பிறப்பையுடைய நமக்கு விஷ்ணு ஸம்பந்தமில்லாதொழியும் வகையெங்ஙனே? வாமனனாய்ப் பிறந்து மாவலிபாற்சென்று மூவடி மண்வேண்டி ஞாலமளந்தபிரா னது அடியை முடிமேற்கொள்ளாதவர் யாரேனுமுண்டோ? இங் ஙனமிருக்க அவனது ஒழிக்கவொழியாச் சம்பந்தம் யாவரால் மறுக் கப்படும். பிரளயத்தில் நெய்நின்ற சக்கரத்தன் திருவயிற்றில் இவ் வுலகம் நெடுங்காலம் கிடந்ததினாலும் அவனது ஸம்பந்தம் யாவர்க்கு முண்டென்பது அறியக்கிடக்கிறதன்றோ? ஆக இப்படி நாட்டிற் பிறந்து மனிசர்க்காய்ப் படாதனபட்ட அவனது செய்ந்நன்றி மறவா திருப்பது யாவர்க்கும் உரிய கடமையன்றோ? ஆகையால் யாவருங் கைக்கொள்ள வேண்டியது வைஷ்ணவமதமேயாம். அப்படிக் கைக் கொள்ளாமைக்குக் காரணம் தங்களை வைஷ்ணவர்களென்று தெரிந்துகொள்ளாமையேயாம். மேற்கூறியவாற்றால் இம்மதம் எந்த ஜாதியிலும், எந்தக்காலத்திலும், எந்த தேசத்திலும் பரவக்கூடிய தாகையாலும், பரவி நிற்கிறதாகையாலும் இது அநாதியாயுள்ள தென்னத் தட்டில்லை.

இனி இம் மதத்தைக் கைக்கொண்ட ப்ரதான புருஷர்களை உற்று நோக்குவோமாகில் இம்மதம் அநாதி என்றே விளங்கும். பிர்ம்மா விஷ்ணுவினுடைய நாபீகமலத்தி லுண்டானவரென்பது யாவருமறிந்ததே. விஷ்ணு புத்திரன் வைஷ்ணவனே ஆகவேண் டும். மேலும் வைஷ்ணவமதத்திற்கு முக்கியமான கொள்கையா

வது பகவதேகோபாயத்வப்ரார்த்தனையாம். அஃதாவது நானடைய வேண்டிய நன்மைக்குத் தகுந்ததோ ருபாயம் எனக்கில்லை; நீயே உற்றதோ ருபாயமாக வேணுமென்று எம்பெருமானைப் பிரார்த்திப்பதாம். அப்படிப்பட்ட கொள்கையை பிர்ம்மா கைக்கொண்டவரென்பதற்கு அவர் எம்பெருமானை நோக்கித் துதிசெய்த “ஜிதந்தை” என்கிற கிருந்தத்தை உற்று நோக்கினால் நன்கு விளங்கும். அதில் *ஸோஹம் தேவதேவேச நார்ச்சநாதௌ ஸ்துதௌ நச, ஸாமர்த்தியவாந் க்ருபாமாத்ர மநோவ்ருத்தி: ப்ரஸீதமே” என்றிரந்திருக்கிறார். ஆகையால் பிர்ம்மாவினுடைய மதம் வைஷ்ணவமாம். இன்னமும் இம்மதத்திற்கு முக்யமான சாஸ்திரம் பாஞ்சராத்திரமாம் இதை பிர்ம்மாவுக்குப் பகவான் ஐந்து இராத்திரி உபதேசஞ் செய்தார்: அதுபற்றியே இதற்குப் பாஞ்சராத்திரம் என்று பெயர் வழங்கலாயிற்று. எல்லா மதஸ்தர்களும் பாஞ்சராத்திரத்தை ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அந்த ஆகமம் ஒன்று உண்டு என்கிற விஷயமும், அது உண்டான முறையும் விவாதமன்றியே எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதே. ஆகையால் பாஞ்சராத்திரத்தைத் தாமும் உபதேச முறையிற் பெற்றுப் பிறரும் அநுஷ்டிக்கவேண்டி உபதேசித்துப் போந்த பிர்ம்மா வைஷ்ணவமதத்தைக் கைக்கொண்டவரென்பதில் ஸந்தேகிக்க வேண்டியதில்லை. இதனாலும் வைஷ்ணவம் அநாதியாயுள்ளதென்பது விளங்கும்

இன்னமும் வைஷ்ணவனுடைய ஸந்ததி வைஷ்ணவமதத்தையே பற்றியிருக்குமாகையால் பிர்மாவுக்குப் புத்திரனான ருத்ரனும் வைஷ்ணவனே. அப்போது ருத்ரமதமும் வைஷ்ணவமதமாயிருக்கவேணும். பகவான் ஒவ்வொரு உயர்ந்த வஸ்துவில்தான் விசேஷமாக ஆவேசித்திருப்பதாகச் சொல்லிவரும்போது *‘வைஷ்ணவாநாமஹம் சம்பு:” என்று அருளிச்செய்தான். இதனால் ருத்திரன் வைஷ்ணவருள் சிறந்தவனென்பது தெளிவாகிறது.

ஆனால் வைஷ்ணவர்கள் ருத்ரனை விசேஷித்து ஆதரிப்பதில்

---

* இ-ள். தேவதேவேச நித்யஸூரிகளுக்கு நாதனானவனே! உன்னைப் பூஜை செய்வதிலும், ஸ்தோத்திரம் பண்ணுவதிலும், யான் சக்தியுடையேனல்லேன். கருணாநிதியான நீயே என்னிடத்திற் கிருபை செய்யவேண்டுமென்பதாம்.

* இ-ள். வைஷ்ணவர்களுக்குள் சிறந்தவனான ருத்திரனும் நானாகவேயிருக்கிறேன் என்பதாம்.

லேயே? அது கூடும்படி எங்ஙனே யென்னில்? ருத்ரன் வைஷ்ணவனில்லை யென்பதினாலும், அவன் விஷயத்தில் த்வேஷத்தினாலும், அவனை ஆதரிக்கிறார்களில்லை என்பதில்லை. வைஷ்ணவர்கள் ருத்ரனை ஆதரிக்குமுறையும் உண்டு. ஆதரிக்குமுறையைக் குறித்தும், ஆதரிக்காமலிருப்பதைப் பற்றியும் ஈண்டெடுத்துரைப்பின் விரியும்.

இனி, கிருஷ்ணன் துவாரகையிலிருந்து வெளியே புறப்படும்போது துவாரபாலகரை நோக்கி "சக்ராங்கிதா: ப்ரவேஷ்டவ்யா: யாவதாகமநம்மம, நாமுத்ரிதா: ப்ரவேஷ்டவ்யா: யாவதாகமநம்மம" என்றருளிச் செய்தான். இதனால், யாரை உள்ளே விடுவது என்ற நிச்சயபுத்தி பிறவாதுநின்ற துவாரபாலகரைக் குறித்து இன்னாரை விடுகவெனக் கூறினான். அஃதாவது நான் வருமளவும் சங்க சக்ரதாரணங்களையுடைய வைஷ்ணவர்களை உள்ளே விடுக. அஃதில்லாதாரை விலக்குக என்பதாம். உபலக்ஷணத்தால் புண்ட்ரதாரணத்தையுங் கொள்க. இங்ஙனம் கண்ணன் அருளிச் செய்ததில் சங்க சக்ரதாரணமுடையவர்களை உள்ளே விடுக என்றதனால் அஃதில்லாதாரை விடவேண்டாம் என்ற பொருள்தானே விளங்கிக் கிடக்கிறது. அவ்வாறிருக்க சக்ரதாரணமில்லாதவர்களை விடவேண்டாமென்று பின்னையும் எடுத்துரைத்தது குற்றமாகாதோவெனில்? ஆகாது. இதிலோர் விசேஷப்பொருள் விளங்கிக் கிடக்கின்றது. அஃதாவது சக்ரதாரணமில்லாத ஹ்ருதயஸுத்தியுடையாரும் பலருண்டே; அங்ஙனமிருக்கச் சக்ரதாரணமுடையவர்களை மாத்திரம் உள்ளே விடுகவெனவுரைக்கின்றானே; என் செய்வதென மனக்கலக்கங்கொண்டு நின்ற துவார பாலகரின் குறிப்பறிந்த கண்ணன் அவர்களின் மனக்கலக்கம் நீங்க சக்ரதாரணமில்லாதவர்களைப் பாவசோதனஞ் செய்து விடுக என்றான். அஃதாவது அவர்களின் உட்கருத்தை ஆராய்ந்து விடுக வென்பதாம். இதனான் வைஷ்ணவர்களிற் சிலர் வைஷ்ணவர்களுக்குரிய அடையாளங்களைக் கொள்ளாதவர்களுமுண்டு; அவர்கள்பால் ஸம்சயமுண்டாம்போது அவர்களது உட்கருத்தைப் பரீக்ஷிக்கவேண்டியதென்பது ஏற்படுகிறதாகையால்; பிறருடைய ஸம்சயத்தை விலக்குவதற்காக வைஷ்ணவர்கள் வெளிப்படையான அடையாளங்களைக் கொள்ளவேண்டுமென்பது விளங்குகிறது. இதனால் சங்கசக்ர புண்ட்ரங்களைத் தரித்துக் கொள்ளுமுறை எப்போதுமுள்ளதென்பது தெளிவாகிறது.

கண்ணன் "நாமுத்ரிதா:" என்றருளிய சுலோகத்திற்கு வேறோர் வகையாற் பொருள் கொள்வாரின் கொள்கை பின் வருமாற்றால் விலக்கப்படுகிறது.

இராஜ நீதியை அநுஸரித்த இராஜாங்கங்களிற் சில முத்திரைகளுண்டு. இஃதில்லாதவரிடம் ஸம்சயங்கொள்வதுமுண்டு. இவ்விஷயம் முத்திராராக்ஷஸம் முதலிய கிருந்தங்களிற் காணலாம். இங்குக் கண்ணன் "சக்ராங்கிதா:" என்றது வைஷ்ணவர்கட்குரிய அடையாளத்தைக் குறிப்பிட்டதன்று; இராஜ சிந்ஹங்களைக் குறிப்பிட்டதாம் என்ன வொண்ணாது. இங்கு அப்படிப்பட்ட முத்திரையைச் சொல்லுவது பொருந்தாது. அம் முத்திரையானால் அது இராஜாவுக்குரிய முத்திரையா யிருத்தல்வேண்டும். இங்குக் கிருஷ்ணன் இராஜாவல்லன்; ஆகையால் அவன் முத்திரை இராஜமுத்திரையாகாது. மேலும் உக்ரஸேநர் இராஜாவாவர்; அவர் கிருஷ்ணன் அவதாரத்திற்கு முந்தியே இராஜாவாக இருந்து வந்தமையால் அப்போதே ஒரு முத்திரை யேற்பட்டிருக்கவேண்டும். இங்கு, "சக்ராங்கிதா:" என்றது வைஷ்ணவ சிந்ஹத்தையே சொன்னதாகக் கொள்ளவேண்டும். கிருஷ்ணன் அநுகூலராயிருப்பார்க்கும், மற்றுமுள்ளவர்க்கும், அநுகூலனா யிருப்பானாதலால் அதை அநுகூலச் சிந்ஹமாகச் சொல்லத் தடையில்லை. மேலும் 'சக்ராங்கிதா:" என்றது துவாரபாலகர்களுக்குக் கிருஷ்ணனை த்வேஷிப்பார் பலவிடங்களிலு மிருக்கின்றார்களாகையால் அயல் தேசத்தார் யாரேனும் உள்ளே புகுரில் அவர்களை அநுகூலர்களென்று அறியும்படி எங்ஙனே என்றுண்டான ஸம்சயத்துக்காகச் சொல்லப்பட்டது; இதை இராஜலக்ஷணமாகச் சொல்லில்; அயல் தேசத்தார்க்கு இந்த இராஜாவுக்குண்டான லக்ஷணமிருக்க நியாயமில்லாமையால்; இதை அநுகூலர்களா யுள்ளவர்கட்கு லக்ஷணமாகச் சொல்லுவது பொருந்தாது; ஆகவே இதை வைஷ்ணவ லக்ஷணமாகக் கொள்ளவேண்டும்.

மேலும் நமன் தனது தூதர்களுக்கு வைஷ்ணவர்களின் லக்ஷணங்களை ரஹஸ்யமாகச் சொல்லும்போது *"யேபாஹுமூல பரிசிந்

* இ-ள், எவர் தோள் மூலங்களில் சங்கசக்ரங்களைத் தரித்துக் கொண்டவரோ? எவர் நெற்றியில் விளங்கும் ஊர்த்துவ புண்ட்ரத்தை யுடையவரோ? எவர் திருமணித் தாவடம் பூண்டவரோ? அவர் வைஷ்ணவராவர்; அவர் உலகத்தைப் பரிஸுத்தமாகச் செய்பவராவர் என்பதாம்.

ஹித சங்கசக்ரா: யேவா லலாட பலகேலஸ தூர்த்வபுண்ட்ரா: யெகண்ட லக்நதுளஸீ நளிநாக்ஷமாலா: தேவைஷ்ணவா: புவநமா சுப வித்ரயந்தி" என்று இவ்வாறு குறிப்பிட்டான். இதனுலும் வைஷ்ணவம் அநாதி என்பதும், பிறர்களுக்குண்டாம் ஸம்சயத்தை மாற்றுதற்கு வெளிப்படையான லக்ஷணங்கள் வேண்டுமென்பதும், விளங்குகின்றன.

இனி பிருஹ்ம புத்ரரான நாரதரும் வைஷ்ணவரே யாவர். அவர் துவார்கையிலிருந்த காலத்தில் வஸுதேவர் அவரை வணங்கி அடியேன் ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டிக் கரையேறும் உபாயத்தை உபதேசித்தருள வேண்டும் என வேண்டினர். அப்பொழுது நாரதர் பழைமையான ஓர் கதை சொல்லத் தொடங்கினர். அக் கதையில் பாஞ்சராத்திரத்தில் பகவானுலருளிச் செய்யப்பட்ட பாகவத தர்மங்களெல்லாம் அடங்கிக் கிடக்கின்றன. பிறருக்கு எத் தர்மத்தை உபதேசிக்கப் புகுகின்ருரோ அவர் அத் தர்மத்தை அநுஷ்டிக்கும் இயல்பினரா யிருத்தல்வேண்டும். இங்கு நாரதர் வஸுதேவருக்கு உபதேசிக்கட்புகுந்த தர்மத்தை நாரதருங் கைக்கொண்டவரா யிருத்தல்வேண்டும். அவ்வாறு கைக்கொள்ளா திருப்பாராகில் அவர் சொல்லும் செயலும் ஒத்திராமையால் அவர் சொல்லுவது நம்பிக்கையை யுண்டுபண்ணுது. தான் உஜ்ஜீவனேபாயமாகக் கொண்டது ஒன்றும், பிறருக்குபதேசிப்பது ஒன்றுமா யிருக்குமாகில் வஞ்சனை படைத்த நெஞ்சினை யுடையவராவர். அவர்க்கு அது கூடாதாகையால் அவர் வைஷ்ணவ தர்மத்தைக் கைக்கொண்டவராவார். இனி அவர் சொன்ன ஐதிஹ்யத்தாலும் வைஷ்ணவதர்மம் அநாதியென விளங்கும். அது வருமாறு.

"ஜநகொஹவை வைதெஹ:" ஜநகரென்று பிரஸித்தமாயுள்ளவர்; விதேஹ தேசத்திலுண்டானவர்; "கர்மணைவஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:" என்று ஜநகர் முதலாயினுர் கர்மாநுஷ்டானத்தினுலே ஸித்தியை யடைந்தவர்கள் என்று கொண்டாடப்பட்ட ஜநக வம்சத்திலுதித்த நிமிச் சக்ரவர்த்திக்கும், ருஷப குமாரர்களான ஒன்பது யோகிகளுக்கும் நடந்த ஸம்வாதத்தை, அஃதாவது வினவிடையாயுள்ள கதையைச் சொல்லத் தொடங்கினுர். ருஷப குமாரர் யாரென்னில்? பிருஹ்மாவின் புத்திரர் மநு

அவருடைய புதல்வர் பிரியவ்ருதர் அவருக்கு அக்நித்ருதா என்றொரு புதல்வர் தோன்றினர். அவருக்கு நாபி யென்றொருவர் உதித்தனர்; அவருடைய புத்திரராவார் ருஷபர்; இந்த ருஷபருக்கு நூறு புத்திரர் தோன்றினர்; அவருள் மூத்த புதல்வர் நாமிருக்கும் தேசத்திற்கு அதிபதியாயிருந்தவர்; அவர் பெயர் பரதரென்று வழங்கப்படுவார்; அதுபற்றியே நாம் இருக்கும் தேசத்திற்குப் பாரதவருஷமென்னும் பெயர் வழங்கலாயிற்று. அதற்குமுன் இத்தேசம் அஜநாபம் எனப் பெயர் வழங்கப்பெற்றது. அப் பரதரின் தம்பிகளுள் ஒன்பதின்மர் இந்தப் பாரத வருஷத்திலுண்டான ஒன்பது கண்டங்களுக்கும் அதிபதியானர்கள் மற்றத் தம்பியருள் எண்பத்தொருவர் வேதவேதாந்தங்களை யாவருமறியத் தெளிய உபதேசிக்குமவர்களாய் ப்ராஹ்மணர்களானர்கள். ஏனைய ஒன்பது தம்பிமார்களும் பாஞ்சராத்திரத்தை உபதேசித்தும் அநுஷ்டித்தும் போருமவர்களாய் யோகிகளானர்கள். இவர்கள் கவி, ஹரி, அந்தரிக்ஷர், ப்ரவ்ருத்தர், பிப்பாலயனர். ஆவிர்போத்ரர், த்ரமிளர், சமஸர், கரபாஜநர், என்று பெயர் வழங்கப்படுவார்கள். இவர்கள் இப்பொழுதும், ஸஞ்சரித்துக் கொண்டிருப்பதாகப் புராணங்களால் தெரிகிறபடியால் இவர்கள் ஸ்வாயம்பு மந்வந்தரத்தில் உதித்தவர்களாகிலும், இந்த வைவஸ்வத மந்வந்தரத்தில் பிறந்த நிமிச்சக்ரவர்த்தியோடு ஸம்வாதஞ் செய்யத் தட்டில்லை.

வித்வான்
வேங்கடாசார்யர்,
சேனங்குளம்.

(தொடரும்.)

ஸ்ரீ:

உபநிஷத் விவரணம்.

"ஓம் நம: ஸர்வபூதாநாமாதிமத்யாந்தஹேதவே
அவ்யக்தவ்யக்தரூபாயவிஷ்ணவேபரமாத்மநே"

நமது ஆர்யாவர்த்தத்தில் தத்வஹித புருஷார்த்தங்களை அறிய விரும்புமவர்கள் கைக்கொள்ளும் தர்சனங்கள் ஐந்தாறு. அவைகள் பாஹ்யம் அபாஹ்யம் என்று இருவகைப் படுமென்பது நமது ஆர்யர்களின் கொள்கை. அவைகளில் ஆர்ஹதம் ஸௌகதம் முத

லியவை முற்கூற்றில் சேர்ந்தன. காணுதம் காபிலம் முதலியவை பிற்கூற்றில் சேர்ந்தன. காரணம்—வேதவசனங்கள் பயனற்றன வென்று வாதிக்கும் சாக்கியமுனி முதலானுர் வெளியிட்டமையே. காணுத மாமுனி முதலானோர் வேதவசனங்களைத் தீரப்பயனற்றன வென்றுபேசத் துணிந்திலராதலாலும், வைதிக தர்மங்களையு மனுஸரித்துப் போருவதாலும், இவர்களால் வெளியிடப்பட்ட தர்சனங்கள் வேதார்தஹ்ருதயத்திற்கு (கருத்திற்கு) சில அம்சங்களில் உபகாரமாய் (உதவியாய்) இருப்பதாலும் அபாஹ்யங்கள் (வெளிப் பட்டதல்ல) என்று ஆதரிக்கப்படுகின்றன. இவர்கள் இவ்வாறு வைதிகர்களேயாயினும் தத்வஹித புருஷார்த்தங்களை நிர்ணயிக்க தந்தாமுடைய ஓர் அலௌகிகத்ருஷ்டியையும் அதற்கேற்ற அநுமானங்களையுமே முக்கியமாக ஆச்ரயித்து [கைப்பற்றி] அதற்கு உபபலமாக (உதவி) ஆப்த வசனங்களை எடுத்துரைக்கும் துறையில் வேதவசனங்களை ஆதரித்துப் போருகிறுர்கள். தமது தர்சனத்திற்கு நேர் எதிரான வசனங்கள் வேதத்தில் இருப்பதில் கண் வைப்பதுமில்லை. இவ்வாருன தர்சனங்கள் புருஷத்ருஷ்டி (புருஷனறிவு) மூலமாக வெளிவந்தமையால் பௌருஷேய தர்சனங்களென்னப் பெயர்பெற்றன. இப் பௌருஷேய தர்சனங்களில் காபில தர்சனம்-ஆத்மானுத்மஸ்வரூப ஸ்வபாவங்களையே முக்கிய விஷயமாக உட்கொண்டு வேறு விஷயங்களில் கண்வையாமல் அவ்விவேகத்தைப்பற்றியே முற்றிலும் பேசுவதால் ஆத்ம ஸ்வரூபத்தை அறிய விரும்புமவரில் சிலர் ஆதரிக்க இடமாயிற்று. மற்ற தர்சனங்களைக்காட்டில் இத் தரிசனத்திற்கு இப் பெருமையுளதேயாயினும் புருஷபுத்தி மூலமாய் பிறந்தமையால் உலகில் தலைவனுன ஹிரண்ய கர்ப்பனுக்கும் (நான்முகன்) பிரமப் பிரமாதம் முதலிய புத்தி தோஷம் உளதேயாதலால் மற்ற தர்சனங்களைப் போலவே இதுவும் தத்வஹித புருஷார்த்தங்களை உண்மையாக அறிய விரும்புவோர்களால் ஆதரிக்கத்தக்கதல்லவென்று கருதி பகவான் பாதராயணர் (வேதவ்யாஸர்) அனுதியாய் விளங்கிவரும் வேதங்களையே பிரமாணங்களில் பிரதானமாக (தலைமை)க் கொண்டு அவ் வசனங்களை ஆராய்ந்து தத்வஹித புருஷார்த்தங்களைத் தெளியவுரைத்தார். இதுவே சாரீரக மீமாம்ஸை என்றும் பிரம்மஸூத்ரம் என்றும் பெயர்பெற்று விளங்கிவருகிறது. இதுதான் வ்யாஸரால் செய்யப்பட்டதேயாயினும் இவர் தத்வங்களை நிர்ணயிக்கத் தமது த்ருஷ்டிசக்தியைத் தனித்துவிடாமல் வேதவசனங்கள் செல்லும்வழியிலே

செல்லச்செய்து, அவ் வசனங்களில் பிறர்களால் வரும் கலக்கங்களைப் பரிஹரித்துத் தமது பிரதிபாமூலகமான தர்க்கங்களை அவ் வசனங்களுக்குத் துணையாக்கி அவ்வவ் வர்த்த விசேஷங்களை வெளியிடுகிறாராதலால் இந்த சாரீரக மீமாம்ஸையை அபௌருஷேய தர்சனமென்று சொல்வதே பொருந்தும்.

ஆக இதற்கு மூலம் வேதவசனங்களே. இவைகள் (வியாஸரால் பாரதம் முதலியவை செய்யப்பட்டதுபோல்) ஓர் ஸமயத்தில் ஸர்வேச்வரனால் செய்யப்பட்டதல்ல. அவனது ஸ்வரூபம்போல் இதுவும் அநாதியாயுள்ளது. ஆதலால் தோஷமற்றது. ஸ்வத: பிரமாணம் [பிரமாணமாமளவில் வேறோர் பிரமாணத்தின் ஸஹாயத்தை எதிர்பாராமல் பிரமாணமாமது] இவ்வாறான இதனேற்றத்தை கர்மமீமாம்ஸகர்கள் (ஜைமினி முதலானோர்) விஸ்தாரமாக வெளியிட்டிருக்கின்றனர். இவ்விஷயத்தில் சர்ச்சை (நிரூபணம்) செய்ய இது இடமல்ல. அதன் பிரஸங்கமே வேறு.

ஆத்மஸ்ரூபத்தைப் பற்றிப்பேசும் அவ் வேதவசனங்கள் வேதாந்தம் என்றும் உபநிஷத் என்றும் பெயரால் விளங்கிவருகின்றன. இப்பெயர் பெற நிமித்தம் யாது? என்பதை விசாரிக்கவேண்டும். (வேதாந்தம்) வேதங்களின் அந்தம் (முடிவு) அதாவது பாரதாதி நிபந்தங்களில் கடைத்தலையிலுள்ள வசனங்கள் போல் வேதங்களில் முடிவிலுள்ள பாகங்களென்று பொருள் கொள்வது தகாது. பாரதாதிகளில் எண்ணிக்கைக்குட்பட்ட சில வந்தியாயங்களேயுள. அதுபோல இவ் வேதத்திற்கு அவ்வாறு எல்லையில்லை. "அநந்தாவைவேதா:" எண்ணிலா வேதங்களென வேதவசனங்களும் ஸ்ம்ருதி வசனங்களும் உரைக்கின்றன. வேதங்களில் நமது புலன்களுக்குப் புலப்படாமலிருப்பது பலவேனும் அவைகளின் அர்த்தத்தைச் சில மஹருஷிகள் தமது யோகத்ருஷ்டியால் அறிந்து ஸ்ம்ருதிகளைச் செய்தார்கள் என்றும் நமது ஆர்யர்களின் கொள்கை. இவையெல்லாம் வேதத்திற்கு அவதியில்லை என்பதையே காட்டும். வேதத்திற்கு அளவில்லையேயாயினும் நமது புலன்களுக்கு இலக்காய், அத்யயனக் கிரமத்தில் ஒரு முறையாய் சிஷ்ய பரம்பரையில் விளங்கிவரும் வேதத்திற்கு ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்கிற பிரிவும் அதற்கு அத்யயன முறைப்படி ஓர் ஆரம்பமும் முடிவும் உளதாகையால் அம் முறைமைய பனுசரித்து அந்தம் (கடை) கண்டடாகத்தில் விளங்குமதை வேதாந்

தமெனச் சிலர் சொல்லக்கூடும். இதுவும் சேராது. அவ்வாறு ஈசாவாஸ்யம் என்கிற ஓர் உபநிஷத்தானது வாஜஸனேய ஸம்ஹிதையில் முடிவில் ஓதப்படுவதால் அதொன்றில் வேதாந்தம் என்னும் பதம் பொருந்துவதேயாயினும், பெரும்பாலும் பிராமணங்களில் ஓதப்படும் உபநிஷத்துக்களில் அது எவ்வாறு சேரும். ஸம்ஹிதையின் கிரமத்திற்குப் பிந்தின கிரமத்தில் பிராமணங்கள் சேர்ந்தமையால் வேதாந்தம் என்று கொண்டால் பிராமணங்களில் சொல்லப்படும் கர்மபாகங்களும் உபநிஷத் என்னும் வியவஹாரத்திற்கு விஷயமாக வேண்டிவரும்.

ஆதலால் ஹிதத்தை அறிவிக்குமது வேதம்; அதின் அந்தமாவது பரமஹிதத்தை அறிவிக்குமதே என்னும் பொருளை உட்கொண்ட பெயர் என்று கொள்ளவேணும். பரமஹிதத்தை அறிவித்தலாவது—இனி அறியவேண்டுவது ஒன்றுமில்லை என்னலாம்படி தெரிவித்தலாம்.

ஆக பரமாத்மாவின் அறிவில் எல்லா அறிவும் அடங்கியிருக்கின்றன. அவனையறிந்தால் அனைத்து மறியப்பட்டனவாம். ஆகையால் ஸர்வாந்தராத்மபூதமான பரப்ரம்ஹத்தை யறிவிக்கும் வேத வசனங்கள் வேதாந்தம் என்னும் வ்யவஹாரத்திற்கு விஷயமாம் என்றதாயிற்று.

இங்ஙனமாகில் இச்சமயம் பிர்ம்மதரிசியான ஓர்குரு சீடனுக்கு பரப்ரம்ம ஸ்வரூபத்தை உபதேசிப்பாராகில், அவ் வுபதேசமும் வேதாந்தமெனும் வ்யவஹாரத்திற்கு இடமாம்? இடமாகில் என்ன குறை. அன்றிக்கே வேதம் என்கிற பதம் பங்கஜம் எனும் பதம் போல் யோகரூடமுமாம். இல்லையாகில் உலகத்திலுள்ள எல்லா வ்யவஹாரமுமே அவ்வவ் வர்த்தங்களை அறிவிக்குமதாதலால் அங்கும் வேதமென்னும் வ்யவஹாரம் வரவேண்டிவரும். ரூடி அவைகளில் நின்றும் அப் பதத்தை விலக்குவதுபோல் உலகத்தில் விளங்கும் தர்மோபதேசங்களில் நின்றும் விலக்கி அநாதியாய் விளங்கிவரும் ஸம்ஸ்க்ருத பாஷா ரூபமான ச்ருதியில் மட்டும் சேரச்செய்யும். ரூடியும் வ்யவஹார பலத்தை அனுஸரித்தே இருக்கும். ஆக வேதாந்தமெனும் பதம் இச்சமயம் பிர்ம்மதரிசிகள் செய்யும் உபதேசத்தில் சேர இடமில்லையாதலால் அப்பதம் எங்கும் பரவிவிடுமோ வென்னும் குறைக்குமிடமில்லை.

இவ்வாறே வேதாந்தம் என்கிற அவயவார்த்தத்திலுள்ள பெருமையைக்காட்டில் உலக வ்யவஹாரத்தைவிட்டும் வரும் ரூடி யில் அதிகப் பெருமையிருப்பதாக யாம் கருதோம். அன்றிக்கே வேதாந்தமென்னும் பதத்திற்கு கீழ்க் கூறியபடி பொருள் கொள்ளா விடில், உபய வேதாந்தமெனும் நமது ஆசாரியர்களின் வ்யவஹாரம் எவ்வாறு பொருந்தும்? ஸம்ஹிதையை வேதமென்றும், அதன் முடிவிலுள்ள பாகத்தை வேதாந்தமென்றும் பிரித்துக் காட்டுவது போல த்ராவிட வேதாந்தத்தில் எவ்வாறு பிரித்துக்காட்டக்கூடும்? இவ்வாறே உபநிஷத் என்னும் பதமும் அர்த்த விசேஷத்தை யுட் கொண்டே நடைபெறுகிறது. உப-நி-ஷதி (அநாதிகாலமாய் அனுவர்த்தித்துவரும் கர்மபாசத்தை) சிதறச் செய்யுமது. அன் றிக்கே அளவற்ற ஆனந்தமயமான ஓர் வஸ்துவை யடையச்செய்யு மது. இத்தன்மை பிர்ம்ம வித்தைக்கேயாயினும் வேத வசனங் கள் அவ்வித்யை உபதேசிப்பதால் உபநிஷத்தென்று வ்யவ ஹரிக்கப்படுகின்றன. ஆக கர்மபாசத்தினின்றும் நீங்கி அளவற்ற ஆனந்த ஸாம்ராஜ்யத்தை யடைய விரும்புவோர் தத்வஹிதங்களை அறிய விரும்பி ஆதரிக்குமவைகளில் முதல் தலையில் விளங்குமவை உபநிஷத் என்றதாயிற்று.

இவ் வுபநிஷத்துக்கள் தான் தத்வநிஷ்கர்ஷம் செய்யுமளவில், அனைத்துக்குமே ஓராத்மா உண்டு; இவ்வாத்மஸத்தையின்றி ஸத்தையுடைய தொன்றுமே இல்லை என்று ஒரேமிடறாகக் கூறு கின்றன. இவ் வேகாத்ம வாதமே தர்சனங்களனைத்திலும் இவ் வுபநிஷத்துகளுக்குள்ள ப்ரதான பேதம். நமது தர்சனக்காரர் களில் இவ் வுலகைப் பலவகையான பரமாணுபரிணாம மென்பார் சிலர். த்ரிகுண பரிணாம மென்பார் சிலர். இவ்வாறு ஒருவர்க் கொருவர் எதிர்த்து நின்றும் புருஷபேதத்தை மட்டிலும் ஒரு மிடறாகவே அங்கீகரித்துப் போந்தாரல்லது ஏகாத்ம வாதத்தைக் கனவிலும் அறிந்திலர். வ்யாஸ பகவான் இவர்களை நிரஸித்து வேதாந்தங்களின் ஸாராம்சமான ஏகாத்ம வாதத்தை ஆங்காங்கு சூத்திரங்களால் நிலைநிறுத்தி வருகிறார். இவ் வனைத்துக்குமே ஓர் ஆத்மா வித்தென (உபாதானமென)க் கொள்வதே இவ் வேகாத்ம வாதத்திற்கு உயிர்நிலையாம். அக் கொள்கையை வேதாந்த வாக் கியங்களில் காரணவாக்கியங்களில் உட்புகுந்தால் பெரும்பாலும் காணலாம். அனைவரும் தெளிய அறியலாம்படி ஓரிரண்டு வாக்

கியங்களை இங்கு எடுத்துக் காட்டுகிறேம். "ஆத்மாவா இதமேக ஏவாக்ர ஆஸீத்; ஆத்மந ஆகாசஸ்ஸம்பூத: ஆகாசாத் வாயு: வாயோ ரக்நி: அக்நேராப: அத்ப்ய: ப்ருதிவீ"-இதன் பொருள். இது பற் பலவாகி இச்சமயம் புலப்படுமது; முன் சிருஷ்டிக்குமுன் ஒரே ஆத்மாவாக இருந்தது; ஆத்மாவினின்றும் ஆகாயமுண்டாயிற்று; ஆகாயத்தினின்றும் வாயு வுண்டாயிற்று. வாயுவினின்றும் தேஜஸ் உண்டாயிற்று; தேஜஸ்ஸினின்றும் நீருண்டாயிற்று; நீரினின் றும் பிருதிவியுண்டாயிற்று என்பதாம். மேற்கூறிய இரண்டு வாக் கியங்கள் இக் காரியங்களனைத்திற்கும் மூலபீஜமாயிருக்குமவன் (உபாதானகாரணமாயிருக்குமவன்) ஓர் ஆத்மாவென வெளியிடு கின்றன.

ஆநுமானிகேச்வர வாதிகளான காணாதர்கள் இவ் வுலகனைத் துக்கும் ஓர் ஆத்மாவை (பரமாத்மாவை) நிமித்தகாரணமாக அங்கீ கரித்தார்களேயாயினும் உபாதான காரணமாக அங்கீகரித்திலர். அன்றிக்கே அனைத்திற்கும் ஆதியான பீஜம் (உபாதானம்) ஒன்றே யென அங்கீகரித்திலர். ஆநுமானிகப் பிரதான வாதிகளான காபி லர்கள் மூலபீஜமொன்றேயென அங்கீகரித்தார்களே யாயினும் அது ஆத்மவஸ்துவென அங்கீகரித்திலர். இவ் விருவர்களின் பக்ஷங்களையும் இவ் வாக்கியங்கள் நேராக எதிர்த்துப் பேசுகின்றன. கடக மகுடாதி ரூபமான பல்கலன்கள் (ஆபரணங்கள்) முன் ஒரே பொன் கட்டியாய் இருந்தனவாதலால் பல்கலன்களனைத்திற்கும் பொன்னுருவமே முதலுருவமொழிய வெவ்வேறு மூலங்களில்லை யென வெளியாவதுபோல் இவை முன் ஒன்றேயாய் இருந்தன வென்றதால் அனைத்திற்கும் முதலுருவம் ஒன்றேயென வெளி யிட்டதாயிற்று. இதனால் அநேகமூலபீஜவாதம் (நான்கு வகை யான பரமாணுக்கள் அனைத்திற்கும் வித்தெனக் கொள்ளுவது) நிர விக்கப்பட்டதாயிற்று. அவ்வோர் வஸ்துவும் ஆத்மாவெனச் சொல்வதால் அநாத்மாவாயிருக்கின்ற ||பிரதானம் ஒன்றே அனைத் திற்கும் மூலபீஜமெனச் சொல்லுவது நிரவிக்கப்பட்டது. நான் முகன் முதலானார்போல் ஓர் ஆத்மா (பரமாத்மா) நிமித்தகாரண மாய் நின்று இவ் வனைத்தையும் படைக்க வன்மையுடையானல்லது இவ் வனைத்துக்கும் மூலவுருவாகமாட்டான் என்னுமதுவும் *நிர

* நிரவித்தல்-அழித்தல்.

|| பிரதானம்-மூலப்ரக்ருதி.

விக்கப்பட்டது. அன்றிக்கே அஸத்காரியவாதமும் நிரஸிக்கப் பட்டது. (நூல்களே ஒரு சேர்க்கையால் ஆடையாகின்றன வென்று கொள்ளாமல், நூல்களில் ஓர் சேர்க்கையால் ஆடையென் றும் ஓர் அபூர்வ (புதிய) வஸ்து பிறவினையில்லா நிலையுடையதாய் உண்டாகிறதென்பது அஸத்காரியவாதம்) இவ்வாதம் ஏகாத்மவா தத்திற்கு ஒருவகையில் எதிர்த்தட்டாம். இதை நிரஸிப்பதும் வேதாந்திகளுக்கு பிரதானமானதேயாயினும் காபிலர்களால் நிர ஸிக்கப்பட்டமையால் தனித்துக் கண்வைக்க வேண்டியது மிகுதி யும் இல்லையாம். இங்ஙனமே பிரக்ருதி விக்ருதி பாவத்தை முன் னிட்டுப் பேசும் "ஆத்மந ஆகாசஸ் ஸம்பூத: ஆகாசாத்வாயு:" என் னும் வாக்கியமானது இவ்வாத்மாவை உபாதான காரணமென வெளியிடுகிறது. காரணமென வெளியாக்குகின்றதேயல்லது உபா தானமில்லை யென்னுமது இப் பிரகரணத்திற்குச் சேராது. மேல் நான்கு பரியாயங்களின் ப்ரக்ருதி விக்ருதி பாவங்களன்றே வெளி யாகிறது. இவ்வகையாக காபிலாதி பக்ஷங்களை விலக்கி ஏகாத்ம வாதத்தை உறுதிசெய்யும் வேதாந்த வாக்கியங்களில் உபாதான மாகக் கொள்ளப்படும் ஆத்மாவின் ஸ்வரூபத்தை ஆராய்ந்துபார்க்க வேண்டும்.

புலன்கள் பதினொன்றோடுகூடிய பிராணவாயுவை உபகரண மாகக் கொண்டு புத்தி அகங்காரங்களிரண்டையும் துணையாக்கி ஆங்காங்கு அப்போதைக்கப்போது தோற்றும் உடல்தோறும் புகுந்து புலன்களுக் கிலக்காம் ஏதேனும் கனிகளையுண்டு பறவை கள்போல் உறங்கும் காலத்தில் பிராணபயமே மேற்கொண்டு எக் காலமும் பிராணங்களைப் பாதுகாக்க முயற்சியுடையதாயிருக்கும் ஜீவாத்மாவெனப் பெயர்பெற்ற ஆத்மாக்கள் பலவுள. இவைகளை "விஜ்ஞாநகஸநன்" என்றும் "விஜ்ஞாநமயன்" என்றும் கூறுகின் றன. அனைத்துக்கும் உபாதானமாகக் கூறப்படும் ஆத்மா இவை களுக்கும் ஸத்தையை அளிக்குமவனாய், இவற்றின் சரீரங்கள் தோறும் கூடஇருந்து இவைசெய்யும் செயல்களுக்குச் சாக்ஷியாய் நிற்குமவனாய், இவைகளின் மேம்பட்டவனாய் இருப்பவனாவான். இவனே அனைத்துக்கும் அந்தர்யாமியாய் நின்று ஸ்தூல ஸூக்ஷ்மங் களென்ன காரிய காரணங்களென்ன இருவகையாயிருக்கும் ஜடவஸ்துக் களிலும் அங்ஙனமே அஜடமாகிய ஜீவாதமாக்களிலும் உட்

புகுந்து அவைகளை, ஸர்வ பிரகாரத்தாலும் நியமித்துவருவதால் இவன் அனைத்துக்குமே ஓர் சரீரியாயிருப்பான். ஆதலால் ஆத்மா வென்னும் பதம் இவனிடமே அஸங்கோசந்யாயத்தால் முக்கியமாய் வர்த்திக்கும். ஆகையாலிறே தைத்ரேயஸம்ஹிதையில் ப்ரும்மத்தை யறிந்தவன் மேலான பதத்தை யடைகிறானென்று ஆரம்பித்து அப் பிரும்மத்தை "ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம்'' என்று ஸ்வரூப நிருபண பூர்வகபாக அறுதியிட்டு அவ்வாத்மாவினின்றும் ஆகாயமும் ஆகாயத்தினின்று அக்கினியும் உண்டாகுமென்று உத்பத்திக்கிரமத்தைச் சொல்லுங்கால் அப் பிரும்மத்தை ஆத்மா வென்னும் பதத்தால் வேதாந்தவாக்கியம் வெளியிடுகிறது. அவ்வாக்கியமே அப் பிரகரணத்தில் அவ்வாத்ம வஸ்துவை அன்னமய பிராணமய மனோமயங்களினின்றும் தனித்து அவைகளுக்கு அந்தராத்மாவாய் இருப்பானென்று அவன் வேறுபாட்டைக் காட்டுவது போல் அவ்வளவிலே நில்லாமல் விஜ்ஞானமயனான ஜீவாத்மாவுக்கும் அந்தராத்மாவாய் அவனிலும் வேறுபட்டவனாய் இருப்பானிவன் ஆநந்தமயனென்று வேறுபாட்டைக் காட்டுகிறது. இவ்வந்தராத்மாவானவன் சிருஷ்டி ஸ்திதி லயங்களுக்குக் காரணபூதனாய் மோக்ஷத்திற்கும் காரணபூதனாய் இருப்பதால் இவனிடம் எல்லையில்லாப் பெருமையுடையோனென்னும் பொருளையுட்கொண்ட ப்ரும்ம சப்தம் முக்கிய வ்ருத்தியால் சேருகிறது.

(தொடரும்.)

எம்பார் கிருஷ்ணமாசாரியர்,

ஸ்ரீரங்கம்.

செய்த தவத்தின் பெருமையால், மிகவும் உயர்ந்த மேருவினுஞ் சிறந்து மேலான பதவியாகிய, துருவமண்டலத்து வாழ்க்கையைப் பெற்றுத் துன்பநீங்கி இன்பமுற்றார்கள். அதுவன்றியும், அந்த அநந்தன் தீர்த்தத்திற்கு அயலிலுள்ள காசிபராசிரமத்திலும் ப்ரஹ்ம கற்பயளவும் அம் முனிவர்கள் அகலாமல் வாஸம் செய்வார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

இனிப் பரம பவித்திரமான சக்ரதீர்த்தம் என்னும் தடாகம் அவ் வனந்தன் தீர்த்தத்திற்கு அணித்தாயுள்ளது. அதன் கரையில் காசிபப்ரஜாபதி கணக்கில்லாதகாலம் யோகநிஷ்டையை மேற்கொண்டிருந்தார். அப்போது அவர் ஸ்ரீதரனுடைய திருநாமத்தையே சிந்தையில் த்யானித்து ஜேபித்துவந்தனர். அதனால் அவர் விரும்பிய பரமபுருஷனுடைய ஜோதிமயமான ஸ்வரூபத்தை நேரில்கண்டு அளவில்லாத ஆனந்தங்கொண்டார். உடனே அவர் அந்தப் பாற்கடலிலே பள்ளிகொள்பவனான பரமயோகியைப் பலவாறாகப் புகழ்ந்து ஸ்தோத்திரம் செய்யலானார்.

பேராயிரமோபிரமமோவெவ்வெவைக்கும்
வேராயகாரணமாமேனித்தனிப்பொருளோ
பாராயணமறைகள்பார்த்துணருந்தொல்லுருவோ
நாராயணவோநமோநமோவுன்னடிக்கே.

யோகநெறியுடையாருண்மைத்தியானமதில்
வேகமுறுபாற்கடலும்மேகமும்போல்வீற்றிருப்பா
யாகமொருவரறியாவறியலிற்பாய்
நாகசயனநமோநமோவுன்னடிக்கே.

சித்தமுத்தர்தங்கணிகழுமனுபோகமுமாய்ச்
சுத்தமுற்றசாத்திகத்தோற்றமுமாய்ச்சூரிகளா
லொத்தமுறையேத்தநிதமோங்கியுலகளந்தாய்
நித்தணியுங்கையாய்நமோநமோவுன்னடிக்கே.

'எண்ணிறந்த திருநாமங்களை யுடையவரே! பரப்ரஹ்ம ஸ்வரூபியாயுள்ளவரே! ஸமஸ்த சராசரங்களுக்கும் மூலகாரணமான முழுமுதற் பொருளே! வேதத்தினால் ப்ரதிபாதிக்கப்படுகின்ற ஸ்ரீமந் நாராயணமூர்த்தியே! உம்முடைய திருவடிகளில் நமஸ்கரிக்கின்றேன்.

திருப்பாற்கடலும் காளமேகமும் போலே யோகிகளுடைய த்யானத்திற்கு விஷயமாகி, ஒருவராலும் அறியமுடியாத உருவம் அறியும்படி ஸேவை ஸாதிப்பவரே! பாம்பணையில் பள்ளிகொண்டு அறிதுயில் அமர்ந்தருளும் உமது அடிக்கமலங்களில் அன்புடன் வணங்குகிறேன்.

நித்ய முக்தர்களுக்கு அநுபாவ்யரானவரே! சுத்த ஸத்வ ஸ்வரூபியே! நித்ய ஸூரிகள் அனவரதமும் ஸ்தோத்திரம்பண்ண உலகங்கள் யாவையும் ஒருங்ககப்படுத்திய உமது பதயுகளங்களைப் பணிந்து போற்றுகிறேன்.

ஸர்வாந்தர்யாமியா யிருப்பவரே! அனைத்துயிர்களுக்கும் அந்தராத்மாவாயுள்ளவரே! ஞானஸ்வரூபியே! யோகிகளுடைய ஹ்ருதயத்தை இருப்பிடமாகக் கொண்டவரே! சுத்த ஸத்வமயமான திருமாமணி மண்டபத்தில் நித்யவாஸம் பண்ணுபவரே! உம்முடைய திருவடிகளில் தெண்டனிடுகின்றேன்.

வேதாந்தத்தில் ஒப்பற்ற ஞானச்சுடர் விளக்காய்த் தோன்றுபவரே! ஸம்யஜ்ஞானமுடைய ரிஷிபுங்கவர்கள் உம்மை ஜ்ஞேயரூபமான பிரபஞ்சத்திற்குக் காரணமென்று சொல்லுவர்கள். அன்றியும் அவர்கள், ப்ரளயகாலத்தில் சகல லோகங்களையும் அழியாமல் தன்னுள் அடக்கிக்கொள்ளும் புகலிடமாயுள்ளவரும், எக்காலத்தும் அழிவில்லாது நித்யமாயுள்ளவரும் நீரேயென்று நிரூபித்துக் காட்டுவர். ஆதலால் அத்தகைய உமது பெருமை எம்போலியரால் எடுத்துரைக்கும் இயல்பினதன்று.

போற்றுதற்கரிய ப்ரக்ருதி புருஷ தத்துவங்களும் அவற்றிற்கு ஆசிரயமும் நீரேயாகிறீர். தன்னிற் சிறந்ததொன்றில்லாத தனிப் பொருளாயும், தோஷரஹிதராயும், சர்வசேஷியாயும், ஜகத் விலக்ஷணராயும், நித்யராயும் உள்ளவர் நீரேயன்றோ?

அல்லாமலும் நீர், பலவகைப்பட்ட ஜீவ வர்க்கங்களும் மற்றும் சராசரங்களடங்கிய ஸமஸ்த லோகங்களும் உம்முடைய திருவுதரத்திலொடுங்கிய யுகாந்த காலத்தில், ஏகார்ணவமான நீர்ப்பெருக்கினிடையே ஞான பக்திகளையுடைய சுகுமாரமான சேஷ பர்யங்கத்திலே, தும்புரு நாரதாதி மஹரிஷிகள் தேவகானம் செய்ய சிரமபரிஹாரம் பண்ணுமவர்போலத் திருக்கண் வளர்ந்தருளினீர்.

இந்த ப்ரகாரமாக இரண்டு ப்ரஹ்மகல்பத்தளவும் சென்ற இராப்பொழுதைப் போக்கித் திருப்பள்ளி யுணருங்காலத்தில், அந்தகாரமயமாய் ஜ்ஞானசூன்யமாய் ஸ்தாவர ஜங்கம ஸங்கம சரீரங்க ளொன்றுமின்றி யிருக்கும் ஆத்மகோடிகளை அவற்றின் கர்மானுகுணமாக சிருஷ்டிக்கு விஷயமாக்கிய உம்முடைய ப்ரபாவம் ஒருவராலும் அளவிடத் தக்கதன்று.

நீர் ஸமஸ்த ஜீவர்களுக்கும் அந்தராத்மாவாய் சர்வ சாக்ஷியாய் நிற்கின்றீர். நிரவச்சின்னமாய் இடைவிடா தியங்கும் கால தேவதையை சரீரமாகக்கொண்டு ஜீவ சமஷ்டியை மஹததஹங்கார விசிஷ்டமாக்குகிறீர். அதனால் ஸாத்விகத்துடன் ராஜஸாஹங்காரம் கூடி அந்தக்கரணத்தோடு ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் உண்டாகின்றன. தாமஸாஹங்காரத்தினின்றும் ஸப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தங்களாகிற பஞ்ச தன்மாத்திரைகளும் பஞ்சபூதங்களும் உண்டாகின்றன. இவ்வாறு சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களையெல்லாம் பஞ்சீகரணம் பண்ணி நானாவிதமான ப்ரும்மாண்டங்களை நீரே சிருஷ்டிக்கின்றீர். ஒவ்வொரு ப்ரும்மாண்டத்திலும் ஒவ்வொரு ப்ரஹ்மாவை உண்டுபண்ணுகிறீர். பின்பு நீர் அவர்களைக்கொண்டு பதினான்கு புவனங்களையும் பலவகைப்பட்ட உயிர்த்தொகுதிகளையும் ஸத்வாரகமாகப் படைத்தருளுகிறீர். அவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டவற்றை அத்வாரகமாக நீரே நின்று ரக்ஷிக்கிறீர். அதன் பின்னர், காலதேவதையை வாயிலாகக் கொண்டு ஸத்வாரகமாக நீரே ஸம்ஹரிக்கின்றீர்.

இவ்விதமாக நீர் பல்வேறு உலகங்களையும் படைத்து அளித்து அழிக்கும் திருவிளையாடல் புரிந்து வருகிறீர். வேதவேத்யரான உம்மையே பரம்பொருளென்று வேதங்கள் முறையிடுகின்றன. தத்வஜ்ஞானிகளாயுள்ள மஹரிஷிகள் யஜ்ஞங்களால் உம்மையே ஆராதிக்கிறார்கள்.

எவ்வகைப்பட்ட உயிர்களுக்கும் கர்மானுகுணமாக பலப்ராப்தியை அளிப்பவரும் நீரே. அந்தணர் அனைவரும் உம்மையே நிஷ்காம்யகர்மத்தினால் ஆராதித்துப் பாசபந்தமற்று நிர்தோஷமான பரமபதத்தை அடைகிறார்கள். ஞானயோகிகளாவார் சிலர் சுத்த ஸாத்விக ஸ்வரூபியாகிய உம்முடைய ஸாயுஜ்ஜியத்தை அடைந்து துக்கமற்றிருக்கிறார்கள்.

கர்ம பலமாகப் புஜிப்பிக்கப்பட்ட தாபத்ரயத்தால் வருந்தி ஹிதாஹிதங்களை அறியாமல் அஞ்ஞானாந்தர்களாய் இருப்பவர்களை ஞானச் சுடர்காட்டி உஜ்ஜீவிக்கச் செய்யும் ஆசார்ய க்ருத்யம் உம்முடையதே அன்றோ? ப்ரும்ம நிஷ்டர்களுக்கு ஸதானுபாவ்யரா யுள்ளவரும் நீரேயாவீர்.

அன்றியும் நீர், உம்மை அடைந்த அஜ்ஞரையும் ப்ரும்மஜ்ஞானிகளாகச் செய்கிறீர். அவர்களுடைய ஸமஸ்த பாபங்களையும் தொலைத்து உமது திருவடிக்கீழ்த் தொண்டர்களாக்கிக் கொண்டருளும் உம்முடைய கருணையை என்னென்றுரைப்பது?

கலிகால தோஷத்தால் துஷ்டர்கள் ஸாதுக்களுக்குத் தீங்கிழைத்து வைதிக தர்மங்களுக்கு இடையூறு புரிகிறார்கள்; அப்போது அந்த தர்மங்களுக்கு அழிவுண்டாகாமல் பாதுகாக்க வேண்டி நீர் மானிடருள் மானிடராய் வந்து அவதாரம் செய்வீர். அறிவுடையார்க்கும் அஃதில்லாதார்க்கும் ஒக்க நின்று அருள் செய்தற்பொருட்டு அவ்வக் காலங்களில் அர்ச்சா ரூபமாகவும் அவதரித் தருளுவீர். அவ்வாறுள்ள உமது ப்ரபாவங்களை இவ்வளவென்று எடுத்துச் சொல்லுதல் யார்க்கும் இயலாததாகும்:’ என்று இங்ஙனமாகக் காசிப முனிவர் க்ஷீராப்திநாதனை எம்பெருமானைப் புகழ்ந்து போற்றினார்.

மாசில்லாத மரகதமணிபோலும் வடிவுடையனான வாசுதேவன் அப்பொழுது பெரிதும் அகமகிழ்ந்தான். கடல்போல் நிறைந்த கருணையுடைய அவன் குளிர்ந்த வதனத்துடன் அக்காசிப முனிவரைக் கடாக்ஷித்தருளி, ‘நீ விரும்பியன யாவும் நினக்கு அளிப்பதற்காகவே யாம் இங்கு எய்தியுள்ளோம்; ஆதலால் நினது வேட்கையை வெளியிட்டுரைப்பாயாக:’ என்று அவரிடம் செவிக்கினிய செஞ்சொற்களால் திருவாய் மலர்ந்தான்.

முனிவர் அந்த அமுதமாகிய வார்த்தைகளைத் தன் செவிகளாகிற வாய்களில் மடுத்து இன்புற்றார். அவருடைய உள்ளம் உவகையால் நிரம்ப உடம்பு பூரித்தது. அதனால் அவர் தன் இரு கரங்களையுங் குவித்து எம்பெருமானை வணங்கித் தடைப்படுகின்ற மிடற்றினால் கீழ்வருமாறு கிளக்கலுற்றார்.

‘ஓ ஜகத்பதியே! நீர் ஒவ்வொரு சேதனரிடத்தும் உயிர்க்குயிராய் வீற்றிருக்கின்றீர். ஆதலினால் அவரவர் மனத்தின்கண்

விரும்புவன எல்லாம் உமது அறிவுக்கு விஷயமாகாதன அல்ல. ஆயினும் எனது வேட்கையை இப்பொழுது யானே தெரிவித்துக் கொள்ளுகிறேன். நெடுங்காலமாகப் புத்திரப்பேறில்லாத குறையினால் என் மனம் கவலையுற்றிருந்தது. இச் சக்கர தீர்த்தத்தருகே யான் தவமியற்றியதற்கும் அதுவே காரணமாகும். இப்பொழுது நீர் சேவை சாதித்தருளியதனால் யான் மனக்கவலையை மாற்றியவனானேன். ஸ்ரீய: பதியான உம்முடைய சரண கமலங்களையே சர்வ காலமும் ஆராதித்துக்கொண்டு இவ்விடத்திலேயே இன்னல் தீர்ந்து இனிதாக இருக்கவேண்டுகிறேன். அவ்வாறே என்னைப் பின்பற்றி எனது சந்ததிகளும் தேவரீருடைய பாதாரவிந்தங்களிலே பக்தி செலுத்துபவர்களாகுமாறு திருவுள்ளம் பற்றியருள வேண்டும். அவர்கள் மேலும் மேலும் பெருகிவளர்ந்து எக்காலத்தும் எல்லாவிடத்தும் உள்ளவர்களாகவேண்டும்:' என்று காசிபர் ப்ரார்த்தித்தார். 'அவ்வாறே ஆகுக' என்று தேவதேவனும் திருவருள் சுரந்தான்.

முனிவருடைய எண்ணங்கள் யாவும் எண்ணியவாறே முற்றுப் பெற்றன. பின்பு ஸர்வேசுவரன் மீண்டும் ரிஷிசிரேஷ்டரை விளித்து, 'திவ்ய தேசங்கள் பலவற்றுள்ளும் சிறந்ததான இந்த ஸ்தலத்தில் எல்லாரும் தொழுது உஜ்ஜீவிப்பதற்காகவே யாம் எழுந்தருளினோம்; உலகமுள்ளளவும் அழிவின்றி நிலைபெற்றிருப்பதாய இத் திருப்பதியின்கண் உள்ளும் புறமும் ஒருதன்மையாக எல்லாவிடத்தும் யாம் ப்ரஸந்நமாயிருக்கிறோம்; வேத விதிப்படி ஆதரம்பெருக நம்மை அர்ச்சித்து ஆராதிக்கும் அடியார் குழாங்கள் அனுபவித்து உய்வதற்காகவே போகஸ்வரூபியாக நாம் இவ்விடத்தில் பொருந்தியுள்ளோம்:' என்று இவையனைத்தும் இனிதாகக் கூறிமுடித்துப் பிறகு கண்ணுக்கெட்டாத நெடுந்தூரத்தில் மறைந்தருளினான்.

அவ்வாறு அவன் திருவுருக் கரந்த அன்றுதொடங்கிக் காசிப ப்ராஜாபதியும் தனக்குக் கிடைத்த மேலான வரத்தினால் அளவில்லாத புதல்வர்களை அளித்து உலகத்தை நிறைவித்தார். இக்கதை முழுவதும் நாரதபகவான் எனக்கு நன்குரைத்ததாகும். இதனைக் கேட்பவர்களுக்குக் காமியமெல்லாம் எளிதிற் கைகூடும்:" என்று இவ்வளவும் வ்யாசமுனிவர் சௌனகாதியர்க்கு இயம்பியருளினார்.

பிருதுச் சக்கரவர்த்தி பூசித்தல்.

இவ்வண்ணமாக ஒருநாட் பொழுதுபுலர்ந்தது. மறுநாட் காலையில் சூரியோதயத்திற்கு முன்னதாகவே சௌனகாதி மஹ ரிஷிகள் ஸ்நாந ஸந்த்யாவந்தனுதி நித்யகர்மங்களை விதிப்படிசெய்து முடித்தார்கள். மதுசூதனனை மனதிலே தியானித்தனர், செவி களுக்கு நல்ல உணவாகிய கடம்பவன மான்மியத்தைக் கேட்பதி லேயே கருத்துடையவர்களாயினர். அதனல் அவர்கள் மதுவை விரும்பிய வண்டுகள் மலரை நாடிச் செல்லுதல்போலப் பராசர புத்ரருடைய பாதாரவிந்தங்களில் தெண்டனிட்டு வணங்கிஞர்கள்.

வேதவ்யாஸபகவான் அவர்கள் நடுவில் முனிவர்கள் நாயக மாய் விளங்கிஞர். அப்போது அவர் தன் தவயோகத்தால் குற் றங்கள் யாவும் முற்றக்கடிந்து ஸத்வகுண ப்ரசுர்ராய்த் தோன் றினர். கையிலே ஜெபமாலையை வஹித்திருந்தார். துவளுகின்ற ஆசினிப் பட்டாடையொன்று அவருடைய திருவரையினில் உடுக் கையாய்த் திகழ்ந்தது. தோளும் மார்புந் துலங்குமாறு அவர் உபவீதமணிந்திருந்தார். த்வாதச ஊர்த்வ புண்டரங்களும் தீட் டப்பெற்ற அவருடைய திருமேனி தூய்மையும் பொலிவுமுற்றுத் தோன்றியது. செந்தாமரைக் கண்ணனுன திருமாலினுடைய த்யானத்திலேயே எக்காலத்தும் ஈடுபாடுடைய மனதுடன், அப் பெருமாளுடைய சரண கமலங்களிலேயே பலநாளும் மலர் தூவிப் பணிகின்ற அந்தப் பாராசரிய முனிவருடைய ஸந்நிதியில் சதுர் வேத பாரங்கதர்களான சௌனகர் முதலான ரிஷிசிரேஷ்டர்கள் எல்லாரும் இனிய மனதுடன் வீற்றிருந்தார்கள்.

பின்பு அவர்கள் வ்யாஸரை நோக்கி, "ஹே மஹாமுனியே! இம் மதுராபுரியில் எழுந்தருளியுள்ள எம்பெருமானை வழிபட்டு அநிஷ்ட நிரஸனத்தோடு இஷ்டப்ராப்தியும் எய்தி நலம் பெற்ற வர்கள், இக் காசிபமுனிவரையன்றி வேறு யாரேனும் உளராயின் அவர்களைப் பற்றியும் அறிந்துகொள்ள அடியோங்கள் ஆவலுடைய வர்களாய் இருப்பதால் அதனை விவரித்துச் சொல்லுமாறு உம்மை வேண்டிக்கொள்கிறோம்:" என்று முறையிட்டனர். அது கேட் டுக் கருணையால் மனமிரங்கின வாதராயணர், நாரதர் சொல்லக் கேட்ட விஷயங்களையே தான் அவர்களுக்கு நன்ருக உரைப்பதாக

வாக்களித்து, அப்பாலுள்ள கதையின் தொடர்ச்சியை அருளிச் செய்யலானார்.

"வேகவதிக் கரையிலுள்ள மதுரையின் மேற்காக ஒரு புண்ணிய தீர்த்தம் இருக்கிறது. அதற்கு கெஜதீர்த்தம் என்று பெயர் வழங்குகிறது. அஷ்டதிக் கஜங்களும் அவ்விடத்தில் அகலாது உறைகின்றன. அவை அச்சுதனிடத்தில் அளவில்லாத அன்பு பூண்டனவாகி அவனுடைய ப்ரீதிக்குப் பாத்ரமாயுள்ளன.

அதன் தென்பால் திசையில் சனகர் சனந்தனர் முதலிய முனிவர்கள் கோவிந்தனைக் குறித்துத் தவமியற்றி வருகின்றனர். கிருத யுகாதியில் அவர்கள் அத்திருமாலை வரன்முறையாக வணங்கி அவனுடைய திருவடிகளையே தஞ்சமாகப்பற்றி இருந்தார்கள். அதனால் அவர்கள் அப் பெருமானுடைய திருவருட் கிலக்காய்ப் பெறுதற்கரிய பேறுகளைப் பெற்றுப் பெருமையடைந்தனர்.

அஃதவ்வாருக இருமைப்பயனையும் எய்துவிக்கின்ற அந்த கெஜ தீர்த்தத்தின் கரையின் ஒரு பக்கத்தில் தோதாத்திரி என்னும் பெயர்பெற்ற பர்வதமொன்று நிலைபெற்றுத் தோன்றுகிறது. அதற்குக் கிழக்கே யானைமலை யென்று வழங்கப்படுகிற க்ஷேத்ரம் ஒன்றுள்ளது. அங்கே பெருமாள் நரஸிம்ஹ ரூபியாய் சேவை ஸாதிப்பர். ப்ரஹ்லாதாழ்வானுக்கு அனுக்ரஹிப்பதற்காக அவ்வாறு அவதரித்த பகவான், சரபத்தின் உருவத்தைக்கொண்டு தன்னை எதிர்த்துவந்த ருத்ரனை ஏழுலகங்களும் நடுங்குமாறு போரிலே தொலைத்து வெற்றிகொண்டு அவ்விடத்தில் வீற்றிருந்தருளுகிறான்.

அதுநிற்க, விஷ்ணுதீர்த்தம் என்னும் ஒரு விசேஷமான புண்ணிய தீர்த்தம் அதே ஸ்தலத்தில் அமைந்துள்ளதாகும். அந்நீரில் ஸ்நாநம் செய்து, நரஸிம்ஹ ரூபியான நாராயணனிடத்திலே எப்பொழுதும் பக்தி செலுத்துபவர்களான வாலகில்லியர்கள் அநேகர் அங்கு வாஸம் செய்கிறார்கள். அன்றியும் மனதின்கண் மாசற்று, இயமநியமாதி அஷ்டாங்க யோகங்களையும் முயன்றவர்களாகிய அந்த வாலகில்லிய முனிவர்கள், மதுரையில் அஷ்டாங்க விமானத்தில் அமர்ந்தருளும் மாயவனுடைய அனுக்ரஹத்தால் அணிமாதி எண்வகைச் சித்திகளும் எளிதிற் கைவந்தவர்களாயினர். இவ்வளவு விஷயங்களும் உங்களுக்கு நன்றாக இயம்பினேன். இன்னும்,

நால்வகைப்பட்ட யுகங்களுள்ளும் இரண்டாவதான திரேதாயுகத்தில் நிகழ்ந்ததான ஓர் அதிசயம் உளது; அதனையும் கேட்பீராக;'' என முனிவர்களை நோக்கி மொழிந்து வ்யாசர் மேலும் சொல்லத் தொடங்கினார்.

''பிருது என்னும் பெயரையுடைய பூபதியொருவன் பூர்வ காலத்தில் அரசுபுரிந்து வந்தான். அவன் உலகமெல்லாந் தனிக்கோல் செலுத்தித் தன்னை யொப்பாரும் மிக்காருமின்றி விளங்கினன். அதுவேயுமன்றி அவன் அறிவினாலும் ஆற்றலினாலும் யாவரினும் மேம்பட்டவனானான். அவனுடைய மனைவி மாதவனையே மனதில் நினைத்துத் திருவஷ்டாக்ஷர மந்த்ரத்தை அனவரதமும் ஜெபித்தாள். அப்போது அஷ்டாங்க விமானத்தை ஆலயமாகக் கொண்ட எம்பெருமானுடைய க்ருபாகடாக்ஷத்தால் எண்மர் புதல்வர்கள் அவளிடம் உதித்தனர்.

அப்பால் தக்க பருவம் நிரம்பியபொழுது, அவள் தன் புத்திரர்களுக்கும் அம் மந்திரத்தை உபதேசித்து அதனையே ஓதிவரும்படி ஆக்ஞாபித்தாள். அதன்பிறகு அரசனுந் தேவியும் அரசாளுரிமையைச் சிறுவர்களிடம் விடுத்து இம் மண்ணுலகை நீங்கிப் புறப்பட்டனர். உரோகிணியும் சந்திரனும்போல ஒருவர்க்கொருவர் நேசமுடைய அவர்கள், அருமைவாய்ந்து அழகினால் இணையற்றதான விமானமொன்றில் ஏறி விசும்பாறாகச் சென்றார்கள். தேவர்களும், சித்தர்களும், சாத்யர்களும், கந்தர்வர்களும், யக்ஷர்களும், கின்னரர்களும், நாகர்களும் முதலானோருடைய நானாவிதமான லோகங்களுக்கெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாக அவர்கள் போனார்கள். அதன்பின்பு ஸப்தரிஷி மண்டலங்களையும் கடந்து அப்பாற் சென்றனர். மறுபடியும் அவர்கள், ஆகாசத்தில் சஞ்சரிப்பவர்களான சாரணர்களுடைய உலகமும், பூதகணங்கள் வசிக்கும் உலகமும், வித்யாதரலோகமும், கோலோகமும் முதலாவுள்ள இடவிசேஷங்களைக் காணவேண்டுமென்னும் ஆசை இழுத்துச் செல்ல, அங்கங்கே போய்ப் பார்த்து மீளவும் திரும்பினார்கள்.

இவ்வாறு அவர்கள் அவ்வவ் விடங்களிலுள்ள அனுபவங்களையெல்லாம் ஐம்புலன்களும் ஆரத்துய்த்து வருங்காலத்தில், ஒரு நாள் வையைநதியின் விசாலமான கரையின்மேலாக அந்தரமார்க்கமாய் விமானம் செல்லலுற்றது. அப்பொழுது, கடம்பவன மத்